*கவனிக்க.- 2015.12.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1948 - 2016 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2016.01.01

*1948 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 9 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - வவுனியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, மாசி மாதம் 01 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, மார்கழி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா | வவுனியா தெற்குப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், வவுனியா |

1-12

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தினை திருத்தம் செய்தல் - காலி மாவட்டம்

2015.10.02 ஆந் திகதிய 1935 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தை 2016.02.02 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

2. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தாழ்மையுடன் கருத்திற்கொள்ளவும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| காலி | காலியும் நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டத்தின் காலி நாற்புறமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

*01-11*

---

## திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவியில் III ஆம் தரத்திற்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்காக நிலவுகின்ற வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படுகின்ற பெண் விண்ணப்பதாரி, தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக இணைத்துக்கொள்ளப்படுவர். இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பின்வரும் அறிவுறுத்தல்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 2016.02.01 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் போன்றன தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை தாமதமடையச் செய்வதால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

1. **சேவையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் முறை**.- "கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதோடு, தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | *அதிகூடிய புள்ளித் தொகை* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகத் தேர்வின்போது வெளிக்காட்டப்படும் திறமை | 05 |
| மொத்தம் | 100 |

2. **கல்வித் தகைமைகள் :**

(1) க. பொ. த. (சா. த.) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஆறு (6) பாடங்களில் ஒரே அமர்வில் தோற்றி சித்தியடைந்திருத்தல் ; மற்றும்

(2) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் குறைந்தது ஒரு (1) பாடமாவது (பொது உளச்சார்பு தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

3. **தொழில் தகைமைகள்.**- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவம் தொடர்பான தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்திற்கான முழுநேரப் பாடநெறியைக் கற்று, சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.

4. **சேவை அனுபவம்.**- அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் உரிய பதவியில்/துறையில் ஒரு வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. **உடற்தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி சிறந்த குணவியல்புகளை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான சகல தகைமைகளையும் எல்லாவகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **சம்பள அளவுத்திட்டம்.**- இந்தப் பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (IV) இற்கு இணங்க சம்பளக் குறியீட்டு இலக்கம் MN-1-2006 (A) : ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - 22,040 ஐக் கொண்ட (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

9. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப இலக்கம் 1 முதல் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரிக்கப்பட்டு, தமது கையொழுத்தின் மூலம் முறையாகப் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள் அல்லது முழுமையான தகவல்களை உள்ளடக்காத விண்ணப்பப்படிவங்கள் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், உரிய பிரிவுக்கான கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் 2,40,360 ரூபாவை அல்லது அதற்கு அதிகமான தொகையினை வருடாந்தத் திரட்டிய சம்பளமாகப் பெறும் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள நிரந்தரப் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது பிரதம மதகுரு அல்லது ஏனைய மத வழிபாட்டு இடங்களின் பொறுப்பு வாய்ந்த மதகுரு ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(iv) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பப்படிவங்களை அவர்களது திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

(v) உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டறியப்படின் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அதேபோல் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்படின் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தைக் கொண்டதுமாகும். விதவை/ தபுதாரர்/ அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்தப் பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று (3) வருடங்கள் தகுதிகாண் காலத்துக்கு உட்படுவதோடு, அந்த மூன்று (3) வருட காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இன் ஏற்பாடுகளுக்கேற்ப அரச கரும மொழி தொடர்பில் உரிய தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணம், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு இந்த நியமனம் கட்டுப்பட்டிருக்கும்.

11. வெற்றிடங்களை நிரப்புகின்ற உரிமை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உண்டு.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2016, சனவரி 1.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) வகுதி 2 இற்கான சேவைத் தொகையில் பெண் விடுதிப் பொறுப்பாளர் பதவியில் III ஆம் தரத்திற்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016**

1. விண்ணப்பதாரியின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

(முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :
விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை போன்றன :----.

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் ----  பரீட்சை சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் ----  பரீட்சை சுட்டிலக்கம் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | பெறுபெறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவைக்காலம் | அரசாங்க/அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் என்பது பற்றியது |
|---|---|---|---|
| | | | |

11. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/பதிவுசெய்ததன் மூலமா ? என்பதைக் குறிப்பிடவும் :----.
(பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

12. நீர் அரசாங்க சேவையொன்றில் இருந்து நீக்கப்பட்டவரா ? :----.

13. தற்போது அரசாங்க சேவையொன்றில் இருப்பின் உமக்கு எதிராகத் திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் ஏதேனும் உள்ளனவா ? :----.

14. நீர் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திருமதி/ செல்வி ........................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ....................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துவரின் கையொப்பம்.

(இப்பகுதியானது அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி .................................................. அவர்கள், ........... ......................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

01-150

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2015

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர் களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2016 ஆண்டு ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் 2002.03.01 ஆந் திகதிய இலக்கம் 1225/32 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக இப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பரீட்சை ஒழுங்குமுறைகள் :

(அ) முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்குகின்றன :-

| | |
|---|---|
| பாட இலக்கம் 1 | பொது நிர்வாகம்.- இலங்கை அரசியல் யாப்பு, தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், அரசின் ஏனைய ஒழுங்குக் கோவைகள் |
| பாட இலக்கம் 2 | நிதி |
| பாட இலக்கம் 3 | கல்வி, கல்விச்சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை |

(ஆ) உத்தியோகத்தருக்கு முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரே தடவையில் அல்லது தனித்தனியான பாடங்களாகவும் தோற்ற முடியும்.

(இ) சகல வினாப்பத்திரங்களுக்குமான நேரம் மூன்று மணித்தி யாலங்களாகும்.

**3. பாடவிதானம் :**

(1) பொது நிர்வாகம் :

(அ) இலங்கை (யாப்பு) அரச கட்டளை 1946 மற்றும் 1947 (973 ஆவது வாசகம்)
1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டம் (349 ஆவது வாசகம்)
1972 ஆம் ஆண்டின் மே 22 ஆந் திகதி விதித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பு
1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கம் கொண்ட வாக்காளர்களை பதிவுசெய்யும் சட்டம்

*1981 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டம்*
*1981 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கருத்துக் கணிப்பீட்டுச் சட்டம்*
*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான சட்டம்*
*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு*

(ஆ) அலுவலக மற்றும் துறைசார் ஒழுங்கமைப்பு திட்டம், தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அரசின் ஏனைய ஒழுங்குக்கோவைகள் தாபனவிதிக்கோவையின் வாசகங்கள் I, II, III, IV, V, VI, VII, IX, X, XI, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(2) ***நிதி :***

(அ) அரச நிதிப் பிரமாணத்தின் 1 ஆம் பகுதி (1 ஆவது வாசகத்தைத் தவிர)

(ஆ) நடைமுறை ஆண்டின் வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு *(உ-ம்)* அவற்றின் தயாரிப்புக்கள், வருமானத் தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம்

(இ) கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் கணக்குப் பணிகளுக்கு உரியதான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டக் கொள்கைகள்

(3) ***கல்வி, கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை :***

(அ) *கல்விச் சட்டம் :*
பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டங்கள் தொடர்பான அறிவு மற்றும் விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் :

* *1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம்*
* *1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தக் கட்டளைச் சட்டம்*
* *1951 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டம்*
* *1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்தச் சட்டம்*
* *அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு*
* *1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள் திருத்தச்) சட்டம்*
* *1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஒழுங்குவிதிகள்) சட்டம்*
* *1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவிப்பெயரை மாற்றி அமைத்தல்) சட்டம்*
* *1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாச் சட்டம்*
* *1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (விசேட ஒழுங்குவிதிகள்-திருத்தச்) சட்டம்*
* *1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம்*

(ஆ) *கல்வி நிருவாகம் :*

(1) கல்வி அமைச்சின் கொள்கைகள் :

(i) கல்வி அமைச்சு
(ii) மாவட்டத் திணைக்களம் உட்பட அமைச்சுக்களின் கீழுள்ள திணைக் களங்கள், நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகள்
(iii) தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் கல்வித் திட்டமிடலின் நோக்கம், திட்டங்களை (பாடசாலைத் திட்ட மிடல்கள் உட்பட) அமுல்படுத்தல் போன்றன

(2) பாடசாலை முகாமைத்துவம், பாடசாலை சமூக தொடர்பாடல்கள்
(3) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை
(4) விசேட கல்வி வேலைத்திட்டங்கள்

(இ) *கல்வி மேற்பார்வை :*

* பாடசாலை மேற்பார்வைக்கான திட்டங்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்சாதனை மதிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படும் அனுமானங்கள்
* பாடசாலையில் தொடர்ச்சியான மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள்
* பாடசாலைகளின் சுயமதிப்பீட்டு வேலைத் திட்டங்கள்
* மாவட்டம், திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சினால் பாடசாலை மேற்பார்வைகள்
* வெளிக்குழுக்கள் மூலம் உள்ளக மதிப்பீட்டு மேற்பார்வைகள்

(கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.)

பரிந்துரை செய்யப்பட்டுள்ள நூல்கள் மற்றும் வெளியீடுகள் :

* கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் தொடர்பான ஆசிய நிறுவனம் (1970)
* கல்வி நிர்வாகம் தொடர்பான முகாமைத்துவ கலைமுறைகள்
* கருத்தரங்கு அறிக்கைகள் – புதுடில்லி
* பரி மற்றும் டை (1975) பாடசாலையை நடாத்துதல்-டெம்பிள் ஸ்மித், லண்டன்

* புஷ் டீ கிளேட்டர் ஆர். குட் மற்றும் சீ றிவேர்ஸ் (1980) பாடசாலை
* முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் காப்பர் மற்றும் றோ
* கலாநிதி கான் முகைதீன் செரீப் (1983)
* பாடசாலை நிர்வாகம் (புதுடில்லி)
* கல்வி அமைச்சின் இலங்கைக் கல்வி (1969)
* கல்வி மற்றும் கலாச்சார பணிகள் அமைச்சின் நூற்றாண்டுக் குழு II ஆவது மற்றும் III ஆவது பகுதி
* திறந்த பல்கலைக்கழகம் (1981) பாடசாலைகளின் கொள்கை வகுப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் தலைமைத் துவம் (ஈ 323 பாடநெறியின் 4 ஆவது பகுதி), திறந்த பல்கலைக்கழக யுனிவர்சிட்டி பிறஸ், லண்டன், சிப்மன், மார்டின் (1983) பாடசாலை மதிப்பீடு கய்ஸ்மன் கல்வி நூல் லண்டன், கல்வி அமைச்சின் முகாமைத் துவ மறுசீரமைப்புத் தொடர்பான அறிக்கை - 1984

4. ஒவ்வொரு வினாத்தாளுக்குரிய மொத்தப் புள்ளிகளின் அளவு 100 ஆகும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40 வீதப் புள்ளிகள் பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5. **பரீட்சை மொழிமூலம்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில்நடைபெறும்.

(ii) பரீட்சார்த்திக்கு அரச கரும மொழி அல்லது தேசிய மொழி ஆகிய ஒரு மொழி மூலம் விடையளிக்க முடியும்.

(iii) பரீட்சார்த்தி அரச சேவையில் இணைவதற்கு முன்னர் தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்து கொண்டவர்கள் தொடர்பில் அரச சேவையில் பிரவேசிப்பதற்கு தகைமைபெற்ற மொழி மூலம் விடை யளிக்க முடியும்.

6. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியதாகத் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி தன்மை இரத்துச்செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

7. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவுத் தாளில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1 தொடக்கம் 4 வரையான வினாக்கள் 1 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 2 ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.) சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியால் விளக்கம் பெறவேண்டியதுடன் அன்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதனையும் கருத்திற்கொள்ளவும்.

8. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

9. விண்ணப்பப்படிவம், 2016.02.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். இக்குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் உரியதாயின் அதற்குரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுடன் சரியாகப் பூர்த்திசெய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.

விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியையும் உறுதிசெய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் அதனுடன் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும் (தொலைநகல் இல. 011-2784232). தாங்கள் கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிடவும்.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலிட்ட திகதி, பதிவிலக்கம் மற்றும் தபால் அலுவலகம்.

11. மேலே (9) ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்திசெய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. (i) சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுடன்

பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. "உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்புச் செய்யக்கூடியவாறு நாடெங்கும் அமைந்துள்ள எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்)".

(அ) முதல் தடவைக்கு (முழுமையான பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.)

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும்-

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்காக | ரூ. 1,000 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 500 |

14. (i) பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொண்டல்ல என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(ii) பரீட்சை நடைபெறுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையிலான மாற்றங்களில் ஒப்பீடற்ற நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய செயற்பட வேண்டும்.

16. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

டபிள்யு. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2015, திசெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2015**

First Efficiency Bar Examination For Officers in Class III of The Sri Lanka Education Administrative Service - 2015

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிடவும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.

(iii) முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

2. முகவரி :

(i) பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ii) அலுவலக முகவரி (சிங்களம்/தமிழ்) :----.
(iii) சொந்த முகவரி (சிங்களம்/தமிழ்) :----.
(iv) தொலைபேசி இலக்கம் :----.

3. அறிவித்தலின் (2) ஆவது வாசகத்தின் பிரிவு (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் தொடர் பாக தெளிவாகக் குறிப்பிடவும்.

பாட இலக்கம் [ | ] பாடம் :----.
பாட இலக்கம் [ | ] பாடம் :----.
பாட இலக்கம் [ | ] பாடம் :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

6. ஆண்/பெண் பால் :
ஆண் - 0
பெண் - 1 [ ]

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

7. (i) பதவிப்பெயர் :----.

(ii) திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை :----.

8. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதியாகத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழியைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ..................... | ..................... | ..................... |
| ..................... | ..................... | ..................... |
| ..................... | ..................... | ..................... |

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்தப்பட்ட தொகை :----.

| பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டவும்.<br>(நிழற்படப் பிரதியை வைத்திருக்கவும். உரியதாயின் மாத்திரம்) |
|---|

10. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டென்றும் பரீட்சை தொடர்பான சகல சட்ட ஒழுங்குகளுக்கும் இணங்குவதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கிறேன்.

இவ்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும் விண்ணப்பப்படிவத்தில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றேன். (*)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவிப்பெயர், பதவி முத்திரை.

திகதி :----.

(*) கட்டணம் செலுத்த அவசியமற்றிருப்பின் நீக்கிவிடவும்.

01-88

---

## கல்வி அமைச்சு

*அரச பாடசாலைகளில் காணப்படும் மேற்கத்தேய சங்கீத ஆசிரியர் வெற்றிடங்களுக்காக மேற்கத்தேய சங்கீதப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(அ) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளல் - 2015*

நாட்டில் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் காணப்படும் மேற்கத்தேய சங்கீத ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(அ) தரத்திற்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் தகைமை கொண்ட மேற்கத்தேய சங்கீதப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகைமைகள் :**

1.1 *பொதுவான தகைமைகள் :*

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
(ii) நல்லொழுக்கம் மற்றும் சிறந்த உளவியல் மற்றும் உடலியல் ஆரோக்கியம் கொண்டவராயிருத்தல் ;
(iii) 2016.01.14 ஆந் திகதியன்று 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவராய் இருத்தல்.

1.2 *கல்வித் தகைமைகள் மற்றும் தேவையான அடிப்படைத் தகைமைகள் :*

(i) இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 2016.01.14 ஆந் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைகழகத்தில் பிரயோகப் பயிற்சியுடன் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

(ii) கல்வி அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைக்கமைய க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சையில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு சித்தியடைந்திருக்க வேண்டும்.

* கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 2 வருடங்களுக்குள் இரு தடவைகளுக்கு மேற்படாத எண்ணிக்கையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழிப் பாடமாகச் சித்தியடைந்திருக்க வேண்டும்.

* க.பொ.த (உ.த) பரீட்சையில் புதிய பாட விதானத்தின் கீழ் 03 பாடங்கள் (பொதுச் சாதாரண பரீட்சையினைத் தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு**- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த. (உ.த) பரீட்சை மற்றும் அதற்குச் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறு பரீட்சைகளில் சித்திடைந்தவர்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

2. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1 சேவைக்குச் சேர்த்துக் கொள்ளும் நியமனப் பொறுப்பாளரினால் உத்தரவிடப்படக்கூடியவாறு பரீட்சை ஆணையாளரினால் போட்டிப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் இதன் மூலம் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளைச் சேர்த்து முன்னுரிமை அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறைக்கமைய காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக நியமனம் வழங்க நேர்முகப் பரீட்சை சபையினால் தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வறித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படமாட்டார்கள்.

2.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது மற்றும் பிரயோகப் பரீட்சையின் போது தகைமை கொண்டோரைத் தேர்ந்தெடுப்பதற்காக புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிமுறைகள் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 01**

மேலே 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பில் கல்வி அமைச்சினால் நடாத்தப்படுகின்ற கீழ்க்குறிப்பிடப்படும் 03 பகுதிகளைக் கொண்ட ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு மற்றும் செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன், ஒரு பகுதிக்கு 40% மூன்று பகுதிகளிலும் குறைந்த பட்சம் 120 புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) மேற்கத்தேய சங்கீத சித்தாந்தங்கள் ;
(ii) மேற்கத்தேய சங்கீதத்துடன் தொடர்புபட்ட செவிமடுப்புப் பரீட்சை ;
(iii) மேற்கத்தேய சங்கீதத்துடன் தொடர்புபட்ட செயல்முறைப் பரீட்சை.

மேற்குறித்த பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் முன்னுரிமையினை அடிப்படையாகக் கொண்டு தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2.3 அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் 03 பாடசாலைகளுக்கு மாத்திரம் ஒரு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க முடியும். தமது விருப்பத்திற்கமைய விண்ணப்பிக்கும் பாடசாலைகளை மற்றும் அதன் ஒழுங்கை பின்னர் மாற்ற முடியாது.

2.4 *போட்டிப் பரீட்சைக்குரிய பாடவிதானங்கள்.*- இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது. அவ்விரு வினாத்தாள்களும் கீழே குறிப்பிடப்பட்டவாறு பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்க எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டதாகும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வினாத்தாள்களுக்காக தோற்றுவது கட்டயமானதாகும். பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒரு வினாப்பத்திரத்திற்கு குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :

(1) *நுண்ணறிவுப் பரீட்சை* – நேரம் 1 1/2 மணித்தியலாயம் (100 புள்ளிகள்)

பரீட்சார்த்திக்குரிய ஆசிரியர் தொழிலுக்கான திறமைகள் மற்றும் தர்க்க ரீதியிலான அறிவினைத் தீர்மானிக்கும் இயலுமையினை மேற்பார்வை செய்யும் நோக்குடன் இவ்வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடியதான 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(2) *பொது அறிவு* – நேரம் 1 1/2 மணித்தியாலயம் (100 புள்ளிகள்)

ஆசிரியர் துறைக்குரியதாக இத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு மற்றும் / அல்லது உள்நாட்டு ரீதியில் இடம்பெற்றுள்ள மற்றும் இடம்பெறும் கல்வி முன்னேற்றங்கள் தொடர்பாக பொதுஅறிவு மற்றும் கல்வியினை நவீன மயப்படுத்தல் தொடர்பாக பொது அறிவினை பரிசீலனை செய்யும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் முறையில் 50 கேள்விகளைக் கொண்டதாக இவ்வினாத்தாள் அமைந்துள்ளது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

2.5 ***பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி.***- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மொழி மூலம் மாத்திரம் நடைபெறும்.

**குறிப்பு**.- விண்ணப்பிக்கும் பாடசாலையில் காணப்படும் பாடத்திற்குரிய வெற்றிட எண்ணிக்கையினை விடக் கூடுதலான விண்ணப்பதாரர்கள் தோற்றும் சந்தர்ப்பத்தில் போட்டிப் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளுடன், நேர்முகப் பரீட்சையில் பெற்று கொள்ளப்பட்ட புள்ளியின் அளவின் தொடருக்கமைய முன்னுரிமை வழங்கப்படும். ஒரே பாடசாலையைக் கோரியுள்ள விண்ணப்பதாரர்கள் பலர் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் பாடசாலையில் உள்ள தூர அளவிற்கமைய முன்னுரிமை வழங்கப்படும். இவ் ஒப்பளவுகளுக்கமைய தகைமைகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

2.6 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பினால் பிறப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுள், பட்டதாரிகள் இலங்கை ஆசிரிய சேவையின் 3-1(அ) ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள். இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பளத் திட்டம் 2014-12-02 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 (XII) இற்கமைய இருப்பதுடன் இந்நியமனத்திற்குரிய சம்பளத் திட்டம் ஜீ-ஈ 1-2006 கொண்ட சம்பளப் பிரிவின் கீழ் மாதாந்தம் ரூ. 13,410 - 145X6 -180X7- 215X2 - ரூ. 15,970 ஆகும். தாங்கள் இச்சம்பளத் திட்டத்தின் 14 ஆம் படிநிலையான ரூ. 15,540 எனும் மாதாந்தச் சம்பளத்தில் அமர்த்தப்படுவீர்கள்.

2.7 இந் நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது.

2.8 2014-10-23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/ 38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுவதோடு, பதவி உயர்வானது இலங்கை ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய மேற்கொள்ளப்படும். அத்துடன் இவ்வர்த்தமானி அறிவித்தலைத் தழுவாத ஏதேனும் ஒரு வியடம் இருப்பின் அச்சந்தர்ப்பம் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிகளுக்குட்பட்டுள்ளது.

3. **விண்ணப்பிக்கும் முறை :**

3.1 விண்ணப்பம் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கு அமைய இருக்க வேண்டியதுடன், A4 அளவிலான கடதாசியில் இருபக்கங்களையும் உபயோகித்துத் தயாரித்து பரீட்சாத்தியினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 7.4 வரை முதலாம் பக்கத்திலும் 8.0 முதல் அடுத்த பக்கங்களிலும் தொடராக விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்திருக்க வேண்டியது விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் ஒவ்வாத விண்ணப்பங்களும், பூரணமற்ற முறையில் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசனமிக்கதாகும்). பூரணப்படுத்தப்படும் விண்ணப்பம், அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரர் தமது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பப்படிவத்தில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும்.

3.2 விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாடசாலைத் தொடர் எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்படமாட்டாது என்பதுடன், அது தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

3.3 ஒரு பரீட்சார்த்திக்கு சமர்ப்பிக்க முடிவது ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமாகும்.

3.4 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சாத்தியின் ஒப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளில் கடமைபுரியும் ஆணைபெற்ற அதிகாரியொருவர், பொலிஸ் சேவையின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது 240,360 ரூபாவிலும் அதிகமான வருடாந்த அடிப்படைச் சம்பளமொன்றினைப் பெறும் நிரந்தர அரச பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் என்போர்களில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3.5 முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016.01.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரச பாடசாலைகளில் காணப்படும் மேற்கத்தேய சங்கீதப் பாடத்தின் ஆசிரிய வெற்றிடங்களுக்காக மேற்கத்தேய சங்கீதப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (அ) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளல் - 2015" எனக் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

3.6 அனைத்து முறைகளிலும் பூரணப்படுத்தப்பட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்புகையில் விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் என்பன தொடர்பிலான எந்தவொரு முறைப்பாடும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

3.7 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காதிருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தில் மற்றும் நிதி செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்கு தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயன்மிக்கதாகும்.

4. **பரீட்சைக்குப் பிரவேசித்தல் :**

4.1 அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினத்தன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மத்திய நிலையத்தின் மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டார்.

4.2 பரீட்சார்த்தி தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரத்தில் ஒப்பத்தை உறுதிப்படுத்தி முதலில் அப்பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் அம்மண்டபப் பொறுப்பாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்குப் பரீட்சார்த்தி கட்டுப்படுவது அவசியமாகும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டணைகளுக்கு அவர் உட்பட வேண்டி ஏற்படும்.

**குறிப்பு**– பரீட்சார்த்திக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

5. **ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்.**– தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்பதியடையக்கூடியவாறு பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

6. **போலித் தகவல்களை வழங்குவதற்கான தண்டனை :**

6.1 பரீட்சாத்தி தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை இரத்து செய்ய இடமுண்டு. பரீட்சாத்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வியடம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அவ்வாறின்றேல் ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை தெரிந்தே மறைத்திருப்பின் அவரை அரச சேவையிலிருந்து இடைநிறுத்தவும் கட்டுப்பட வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**– பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இன் கீழ் அரச வருமானத்திற்கு வைப்பிலிடக் கூடியவாறு நாட்டிலுள்ள தபாலகங்கள் / உப தபால் அலுவலகங்களுக்கு பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அப்பற்றுச் சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடவும் (நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீள் கொடுப்பனவு அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்பட மாட்டாது.

8. விண்ணப்பிப்பதற்கான ஆலோசனைகள்.– விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணை 2 ஐப் பயன்படுத்தவும்

**அட்டவணை 02**

சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடம்

**மேற்கத்தேய சங்கீதப் பாடத்திற்குரிய பாடங்கள் மேற்கத்தேய சங்கீதத்திற்கான ஆசிரியர்களை ஆட்சேர்த்தல், ஆசிரிய வெற்றிடங்கள்**

| தொடர் இலக்கம் | மாகாணம் - தேசிய பாடசாலைகள்/மாகாணப் பாடசாலைகள் | ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **மேல் மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 1 | டி.எஸ். சேனாநாயக்க மத்திய கல்லூரி - பேருவெல | 1 |
| 2 | புனித ஜோன் கல்லூரி – களுத்துறை | 1 |
| | மொத்தம் | 2 |
| | **தென் மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 3 | ஸ்ரீ தேவாநந்த வித்தியாலயம் - அம்பலான்கொடை | 1 |
| 4 | றுஹூனு விஜயபா மகா வித்தியாலயம் - அம்பாந்தோட்டை - | 1 |
| 5 | ஆனந்த மத்திய கல்லூரி - அல்பிட்டி | 1 |
| 6 | கறந்தெனிய மத்திய கல்லூரி - கறந்தெனிய | 1 |

| தொடர் இலக்கம் | மாகாணம் - தேசிய பாடசாலைகள்/மாகாணப் பாடசாலைகள் | ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **தென் மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 7 | பட்டேமுல்ல மத்திய கல்லூரி - இமதுவ | 1 |
| 8 | தேவபத்திராஜ கல்லூரி – ரத்கம | 1 |
| 9 | ஸ்ரீ சுமங்கல மத்திய கல்லூரி - ஹிக்கடுவை | 1 |
| 10 | இலங்கை சிங்கப்பூர் நட்புறவு தேசிய பாடசாலை – வீரகெட்டிய | 1 |
| 11 | ஸ்ரீ றேவத தேசிய பாடசாலை – அம்பலாங்கொடை | 1 |
| 12 | தர்மாசோக கல்லூரி - அம்பலாங்கொடை | 1 |
| 13 | தெனியாய மத்திய கல்லூரி – தெனியாய | 1 |
| 14 | கீர்த்தி அபோவிக்ரம மத்திய கல்லூரி – மொறவக்க | 1 |
| 15 | புனித மேரி தேசிய பாடசாலை - அம்பாந்தோட்டை | 1 |
| 16 | தெபறவெவ தேசிய பாடசாலை – திஸ்ஸமகாராம | 1 |
| 17 | சூரியவெவ தேசிய பாடசாலை - சூரியவெவ | 1 |
| 18 | வீரகெட்டிய மத்திய கல்லூரி - அம்பாந்தோட்டை | 1 |
| 19 | தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலயம் - மாத்தறை | 1 |
| 20 | வலஸ்முல்லை தேசிய பாடசாலை - வலஸ்முல்லை | 1 |
| 21 | தங்கல்லை மகளிர் கல்லூரி – தங்கல்லை | 1 |
| 22 | ஊறுபொக்கை மத்திய மகா வித்தியாலயம் - ஊறுபொக்கை | 1 |
| | மொத்தம் | 20 |
| | **மத்திய மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 23 | அமுபிட்டிய மத்திய மகா வித்தியாலயம் | 1 |
| 24 | தெல்தெனிய மத்திய மகா வித்தியாலயம் | 1 |
| 25 | விஜய தேசிய பாடசாலை – மாத்தளை | 1 |
| 26 | கிறிஸ்துதேவ தேசிய பாடசாலை – மாத்தளை | 1 |
| 27 | ஸ்ரீ சுமங்கல தேசிய பாடசாலை – வளப்பனை | 1 |
| 28 | பாக்கியம் தமிழ் தேசிய பாடசாலை – மாத்தளை | 1 |
| 29 | ஸ்ரீ நாக தேசிய பாடசாலை - நாவுல | 1 |
| 30 | நுகவெல மகளிர் மத்திய கல்லூரி – கண்டி | 1 |
| | மொத்தம் | 8 |
| | **வடமேல் மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 31 | விக்கிரசீலா தேசிய பாடசாலை - கிரியுல்லை | 1 |
| 32 | ஆனந்த மத்திய மகா வித்தியாலயம் - சிலாபம் | 1 |
| 33 | ஆனந்த தேசிய பாடசாலை - புத்தளம் | 1 |
| 34 | சேனாநாயக்க தேசிய பாடசாலை - மாதம்பை | 1 |
| 35 | எஸ்.டப்.ஆர்.டீ. பண்டாரநாயக்க கல்லூரி – பண்டுகஸ்நுவர | 1 |
| | மொத்தம் | 5 |
| | **ஊவா மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 36 | வெலிமடை மகா வித்தியாலயம் - வெலிமடை | 1 |
| 37 | புனித ஜோசப் கல்லூரி - பண்டாரவளை | 1 |
| 38 | கந்தேகெதர மகா வித்தியாலயம் - கந்தேகெதர | 1 |
| 39 | பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம் - பண்டாரவளை | 1 |
| 40 | குடா குசும் மகளிர் கல்லூரி - பண்டாரவளை | 1 |
| 41 | பசறை மத்திய மகா வித்தியாலயம் - பசறை | 1 |
| 42 | விசாக்கா கல்லூரி - பண்டாரவளை | 1 |
| 43 | கஹகொல்லை மத்திய மகா வித்தியாலயம் - கஹகொல்லை | 1 |
| 44 | நிஸ்ஸங்க மத்திய மகா வித்தியாலயம் - படல்கும்புரை | 1 |
| 45 | வெல்லஸ்ஸ தேசிய பாடசாலை - வெல்லஸ்ஸ | 1 |
| | மொத்தம் | 10 |
| | **கிழக்கு மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 46 | வின்சென்ட் உயர் மகளிர் கல்லூரி - மட்டக்களப்பு | 1 |
| 47 | சிவானந்த தேசிய பாடசாலை - மட்டக்களப்பு | 1 |
| 48 | புனித மிக்கேல் தேசிய பாடசாலை - மட்டக்களப்பு | 1 |
| 49 | பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் - மட்டக்களப்பு | 1 |
| 50 | ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் - அக்கரைப்பற்று | 1 |
| 51 | டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி - அம்பாறை | 1 |
| 52 | கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை - கல்முனை | 1 |
| 53 | தெஹியத்தகண்டிய தேசிய பாடசாலை - தெஹியத்தகண்டிய | 1 |
| | மொத்தம் | 8 |

| தொடர் இலக்கம் | மாகாணம் - தேசிய பாடசாலைகள்/மாகாணப் பாடசாலைகள் | ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | **வடமத்திய மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 54 | மெதிரிகிரிய மத்திய மகா வித்தியாலயம் - மெதிரிகிரியா | 1 |
| 55 | ரோயல் மத்திய கல்லூரி, பொலன்னறுவை | 1 |
| 56 | ஆனந்த மகளிர் கல்லூரி - ஹிங்குரக்கொடை | 1 |
| | மொத்தம் | 3 |
| | **வட மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 57 | வேம்படி உயர் மகளிர் கல்லூரி | 1 |
| 58 | இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம் | 1 |
| 59 | யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் | 1 |
| 60 | புனித சவரியார் மகளிர் கல்லூரி, மன்னார் | 1 |
| 61 | புனித சவரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார் | 1 |
| | மொத்தம் | 5 |
| | **சப்பிரகமுவ மாகாணம் - தேசிய பாடசாலைகள்** | |
| 62 | அம்பிலிப்பிட்டிய சனாதிபதி தேசிய பாடசாலை - அம்பிலிப்பிட்டிய | 1 |
| 63 | கலவானை தேசிய பாடசாலை - கலவானை | 1 |
| 64 | கே/ டட்லி சேனாநாயக்க தேசிய பாடசாலை | 1 |
| 65 | ஜெய்லானி மத்திய கல்லூரி - தெஹிகஸ்தலாவை | 1 |
| 66 | கொலொன்ன மத்திய கல்லூரி | 1 |
| | மொத்தம் | 5 |
| | **மேல் மாகாணப் பாடசாலைகள்** | |
| 67 | புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி - கொழும்பு 09 | 1 |
| 68 | ஜயவர்தனபுர ஆண்கள் கல்லூரி - கோட்டை | 1 |
| 69 | புனித மரியாள் கல்லூரி – மத்துகம | 1 |
| 70 | நாளந்தா மகளிர் மகா வித்தியாலயம் - மினுவாங்கொடை | 1 |
| 71 | பியகம மத்திய கல்லூரி | 1 |
| | மொத்தம் | 5 |
| | **தென் மாகாணப் பாடசாலைகள்** | |
| 72 | புனித அந்தோனியார் கல்லூரி - காலி | 1 |
| 73 | ஜனாதிபதிக் கல்லூரி - மாத்தறை | 1 |
| 74 | அக்குரஸ்ஸை மத்திய கல்லூரி - அக்குரஸ்ஸை | 1 |
| 75 | மெதடிஸ்த மகா வித்தியாலயம் - மாரவிலை | 1 |
| 76 | புவக்தண்ட மத்திய கல்லூரி - பெலியத்தை | 1 |
| | மொத்தம் | 5 |
| | **மத்திய மாகாணப் பாடசாலைகள்** | |
| 77 | கலேவெலை மத்திய கல்லூரி - கலேவெலை | 1 |
| 78 | புனித அந்தோனியார் கல்லூரி - கண்டி | 1 |
| 79 | நல்லாயன் கன்னியர் மடம் - நுவரேலியா | 1 |
| 80 | புனித சில்வெஸ்டர் கல்லூரி - கண்டி | 1 |
| 81 | புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி - கண்டி | 1 |
| 82 | பேராதெனிய மத்திய கல்லூரி - பேராதெனிய | 1 |
| 83 | வாரியபொல ஸ்ரீ சுமங்கல மத்திய கல்லூரி - கண்டி | 1 |
| 84 | வத்தேகம மகளிர் கல்லூரி - வத்தேகம | 1 |
| | மொத்தம் | 8 |
| | **வடமேல் மாகாணப் பாடசாலைகள்** | |
| 85 | மாரவிலை புனித சவரியார் கல்லூரி - நாத்தண்டியா | 1 |
| | மொத்தம் | 1 |
| | **ஊவா மாகாணப் பாடசாலைகள்** | |
| 86 | கிராந்துறுகோட்டை மத்திய கல்லூரி - கிராந்துறுகோட்டை | 1 |
| 87 | விகாரமாதேவி மகளிர் மகா வித்தியாலயம் - பதுளை | 1 |
| | மொத்தம் | 2 |

| *தொடர் இலக்கம்* | *மாகாணம் - தேசிய பாடசாலைகள்/மாகாணப் பாடசாலைகள்* | *ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| | ***கிழக்கு மாகாணப் பாடசாலைகள்*** | |
| 88 | மெதடிஸ்த மத்திய கல்லூரி - மட்டக்களப்பு | 1 |
| 89 | இந்துக் கல்லூரி - மட்டக்களப்பு | 1 |
| 90 | விவேகானந்த மகளிர் மகா வித்தியாலயம் - மட்டக்களப்பு | 1 |
| | மொத்தம் | 3 |
| | ***வடமத்திய மாகாணப் பாடசாலைகள்*** | |
| 91 | கிரித்தலேகம மகா வித்தியாலயம் | 1 |
| 92 | புனித ஜோசப் மகா வித்தியாலயம் - அனுராதபுரம் | 1 |
| 93 | மிஹிந்தலை மகா வித்தியாலயம் | 1 |
| | மொத்தம் | 3 |
| | ***வட மாகாண பாடசாலைகள்*** | |
| 94 | புனித திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம் | 1 |
| | ***சப்பிரகமுவ மாகாணப் பாடசாலைகள்*** | |
| 95 | ஸ்ரீ புத்தஜயந்தி ம.ம.வி. - பலாங்கொடை | 1 |
| 96 | கரகஸ்தலாவ ம.வி. - பெலிஹூல்ஓயா | 1 |
| 97 | உடுகம ம.வி. - பின்னவலை, பலாங்கொடை | 1 |
| 98 | ஸ்ரீ வலகம்பா ம.வி. – வெலிகபொல, பலாங்கொடை | 1 |
| 99 | வித்யாகர ம.வி. - ஓப்பநாயக்க | 1 |
| 100 | சந்திரிகாவெவ ஜயந்தி ம.வி. – பதலன்கல | 1 |
| 101 | கொலம்பகேஆர ம.வி. - கொலம்பகேஆர | 1 |
| 102 | அம்பிலிப்பிட்டிய ம.வி. - அம்பிலிப்பிட்டிய | 1 |
| 103 | மொரக்கெட்டிய ம.வி. - அம்பிலிப்பிட்டிய | 1 |
| 104 | உடவலவ ம.வி. - உடவலவ | 1 |
| 105 | இரத்னாலோக்க ம.வி. - இறக்வானை | 1 |
| 106 | கேல்ல ம.வி. – கொலொன்ன | 1 |
| 107 | விஜேரிய சுமன ம.வி. - விஜேரிய | 1 |
| 108 | அயகம ஸ்ரீ இராஹூல ம.ம.வி. - இரத்தினபுரி | 1 |
| 109 | கஹவத்தை ம.ம.வி. - கஹவத்தை | 1 |
| 110 | கலவானை காமினி ம.ம.வி.- கொஸ்வத்தை, கலவானை | 1 |
| 111 | மீப்பாகம ஜயந்தி ம.வி. - கலவானை | 1 |
| 112 | அலப்பாத்தை ம.வி. - அலப்பாத்தை, இரத்தினபுரி | 1 |
| 113 | ஸ்ரீ இரத்னாகர ம.வி. - உடகரவிட்ட | 1 |
| 114 | ஸ்ரீ ஜினரத்தன ம.வி. - கரந்தன | 1 |
| 115 | சித்தார்த்த ம.வி. – கெட்டஹத்த | 1 |
| 116 | கிரியல்ல காமினி ம.வி. - கிரியல்ல | 1 |
| 117 | குருவிட்ட ம.ம.வி. - குருவிட்ட | 1 |
| 118 | தர்மாலோக்க ம.வி. - பல்மடுல்லை | 1 |
| 119 | குமார வித்தியாலயம் - இரத்தினபுரி | 1 |
| 120 | பம்பரபொட்டுவ ம.வி. - வேவெல்வத்த, இரத்தினபுரி | 1 |
| 121 | தல்தூவ பௌத்த மகா வித்தியாலயம் - அவிசாவலை | 1 |
| 122 | அமித்திரிகலை ம.வி. - அமித்திரிகலை | 1 |
| 123 | வஹரக்க மகா வித்தியாலயம் | 1 |
| 124 | இரத்னாவளி ம.வி. - மத்தமகொடை, கன்னத்தொட்டை | 1 |
| 125 | சிரிவர்தன ம.வி. - எட்டியாந்தோட்டை | 1 |
| 126 | தெடிகம பரகும்பா ம.வி. - துன்தொட்ட | 1 |
| 127 | கலிகமுவ ம.ம.வி. - கலிகமுவ புதிய நகர் | 1 |
| 128 | பண்டாரநாயக்கா ம.வி. - ஹெட்டிமுல்லை | 1 |
| 129 | மாபோபிட்டிய ம.வி. - மாபோபிட்டிய, உந்துகொடை | 1 |
| 130 | மஹானாக ம.வி. - இரங்வலை, கேகாலை | 1 |
| 131 | சுவர்ணஜயந்தி ம.வி. - கேகாலை | 1 |
| 132 | அல்கமை ம.ம.வி. - அல்கமை | 1 |
| 133 | பாபுல் ஹசன் முஸ்லிம் ம.வி. - வறக்காப்பொலை | 1 |
| 134 | தர்மசிரி சேனாநாயக்க ம.வி. - துல்ஹிரிய | 1 |
| 135 | கிரிநிவச ம.வி. – தொரவக்கை | 1 |
| 136 | இராஜகிரி ம.வி. – திப்பிட்டிய, அரநாயக்க | 1 |

| தொடர் இலக்கம் | மாகாணம் - தேசிய பாடசாலைகள்/மாகாணப் பாடசாலைகள் | ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 137 | பதுரியா முஸ்லிம் மகா வித்தியாலயம் - மாவனல்லை | 1 |
| 138 | நாகரகிரி ம.வி. - ஹெம்மாத்தகமை | 1 |
| 139 | அசோக்க ம.வி. – கிரிவல்லப்பிட்டிய, இரம்புக்கணை | 1 |
| 140 | பராக்கிரம ம.ம.வி. - இரம்புக்கணை | 1 |
| 141 | குலரத்ன ம.ம.வி. – கொடக்கவெல | 1 |
| 142 | ஸ்ரீ சுமன ம.வி. - இரத்தினபுரி | 1 |
| 143 | அல் அஸ்ஹர் முஸ்லிம் ம.வி. - ஹெம்மாத்தகமை | 1 |
| | மொத்தம் | 49 |

9. தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 13 தலைப்பின் கீழ் தமது திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

10. நேர்முகப் பரீட்சைக்காக குறித்த தினத்தில் கலந்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் தொடர்பில் பின்னர் எவ்வகையிலும் மீளப் பரிசீலிக்கப்பட மாட்டாது.

11. அத்துடன் நேர்முகப் பரீட்சைத் திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

12. இவ்வறிவித்தலில் உள்வாங்கப்படாத எவையேனும் விடயமிருப்பின் அது தொடர்பில் தீர்மானிக்கும் உரிமையும், எவையேனும் வெற்றிடங்களின் பகுதியினை அல்லது முழுமையாகவோ நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் அல்லது அது தொடர்பில் இறுதித் தீர்மானத்தினை எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
2015, திசெம்பர் 15.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

அலுவலக உபயோகத்திற்காக

கல்வி அமைச்சு

**அரச பாடசாலைகளில் காணப்படும் மேற்கத்தேய சங்கீத ஆசிரிய வெற்றிடங்களுக்காக மேற்கத்தேய சங்கீதப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்காக சேர்த்துக் கொள்ளல் - 2015**

1. மொழி மூலம் :

சிங்கள மொழி - 2
தமிழ் மொழி - 3

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

2.

| | தொடர் இலக்கம் | மாகாணம் | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

(அட்டவணை 2 இற்கமைய விண்ணப்பிக்கும் 03 பாடசாலைகள் மற்றும் அதற்குரிய தொடர் இலக்கத்தை விருப்பத் தொடரில் இங்கு குறிப்பிடவும். இவ் விருப்பத் தொடரை எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது)

3. 3.1 முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) (உ-ம்:- AMARAKOON MUDIYANSELAGE NAMAL HERATH) :---.

3.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) (உ+ம்:- HERATH.A.M.N) :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- | | | | | | | | | | |

5. தற்போதைய முகவரி- (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதிப்பத்திரம் இம்முகவரிக்குத் தபாலிடப்படும்)

6.

6.1 ஆண் / பெண் பால் :
(பெண் - 1 ஆண் - 0)
(குறித்த இலக்கத்தினைக் கூண்டினுள் எழுதவும்)

6.2 விவாகமானவர் / விவாகமாகாதவர் :
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
(குறித்த இலக்கத்தினைக் கூண்டினுள் எழுதவும்)

6.3 பிறந்த திகதி:

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

6.4 2016.01.14 ஆம் திகதியில் வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

7. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| க.பொ.த (சா.த) பரீட்சை | | க.பொ.த (உ.த) பரீட்சை |
|---|---|---|
| ஆண்டு -<br>பரீட்சை இலக்கம் - | | ஆண்டு -<br>பரீட்சை இலக்கம் - |
| 1 | 5 | 1 |
| 2 | 6 | 2 |
| 3 | 7 | 3 |
| 4 | 8 | 4 |

8. உயர் கல்வி தொடர்பான விபரங்கள்:

8.1 பட்டம் :..........................................
8.2 வழங்கப்பட்ட பல்கலைக்கழகம் :.........................................
8.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி :.............................................
8.4 பட்டம் பெற்ற பிரதான பாடம் / பாடங்கள் :..............................
8.5 பட்டம் பெற்றுள்ள மொழி :................................................

9.

9.1 செலுத்தப்பட்டுள்ள பரீட்சை கட்டணம் : ரூபா. (எழுத்தில்) :............................
9.2 பற்றுச் சீட்டு இலக்கம் :.......................................
9.3 வழங்கிய அலுவலகம் :.......................................
9.4 திகதி :....................................

பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தாங்கள் வைத்துக் கொள்ளவும்.
பற்றுச் சீட்டினைக் கழராது இங்கு ஒட்டவும்.

10. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானவையெனப் பிரகடனம் செய்கின்றேன். நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தகுதியற்றவரென நிரூபிக்கப்படின் நான் பதவி நீக்கத்திற்கு உள்ளாவேன் என்பதனையும் நன்கறிவேன். மேலும் ஒருங்கமைக்கப்பட்ட மற்றும் செயல்முறைப் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் நியமன அதிகாரியினால் பிறப்பிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உட்படுவேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமோர் தகவலினைப் பின்னர் மாற்றியமைக்க மாட்டேன் எனவும் உறுதியளிக்கின்றேன். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :**

இவ் விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி. ....................................... என்பவரைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ........................ ஆந் திகதி தனது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன். உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும் அதன் பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:............................................
பதவி:.........................................................
முகவரி: ......................................................
திகதி :----.

12. **விண்ணப்பதாரர் அரச உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ............................................................................... இனது விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில் நிரந்தர/ தற்காலிக/ அமைய அலுவலராகக் கடமையாற்றுகின்றார் எனவும், இப்பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதனையும் அறியத் தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தர்.

பதவி:..............................................
அமைச்சு/திணைக்களம் ...........................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்).
திகதி: ........................ ..............................

1-83

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015/2016

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஊடாக இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் வகுப்பில் காணப்படுகின்ற பொது மற்றும் விஷேட சேவை பதவியணியினர் வெற்றிடங்கள் 515 ஐ நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015/2016" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2016.02.01.

**குறிப்பு.**- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிமுறைகள் :**

(அ) நியமனம் வழங்கும்பொருட்டு தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சையில் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளிடையே தகைமை அடைந்தோர் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக்குறைந்து 40% புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்களிடையே வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவது ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் 50% ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகைக்குச் சமமான எண்ணிக்கையினராவர். விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சைகளில் பெற்ற புள்ளிகள் வாய்மொழிப் பரீட்சைக் குழாமுக்கு வழங்கப்படமாட்டாது. வாய்மொழிப் பரீட்சைக்காக புள்ளி வழங்கப்படும் முறைமைகள் இந்த அறிவித்தலில் இலக்கம் 10இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின் பிரகாரம் III ஆம் வகுப்பின் வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஏதாவது வெற்றிடத்தின் எண்ணிக்கையோ அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புதல் அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தென், சப்பிரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய, ஊவா, கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் இருக்கின்ற வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்படுவர்.

| *விடயம்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| பொதுவான பதவியணி | 79 |
| சிங்களம் | 40 |
| தமிழ் | 41 |
| ஆங்கிலம் | 37 |
| கணிதம் | 25 |
| விஞ்ஞானம் | 26 |
| வணிகவியல் | 15 |
| உடற்கல்வி | 38 |
| பௌத்த சமயம் | 23 |
| கிறிஸ்தவ சமயம் | 2 |
| இந்து சமயம் | 3 |
| இஸ்லாம் | 2 |
| திட்டமிடல் | 31 |
| தகவல் தொழில்நுட்பம் | 10 |
| மாணவர் அறிவுரையும் வழிகாட்டலும் | 8 |
| மேலைத்தேய சங்கீதம் | 5 |
| சித்திரம் | 4 |
| நாட்டியம் | 7 |
| விசேட கல்வி | 32 |
| ஆரம்பக் கல்வி | 59 |
| வரலாறு | 17 |
| விவசாய விஞ்ஞானம் | 05 |
| மனைப்பொருளியல் | 04 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 02 |

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.21 ஆந் திகதிய 1928/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்த பிரமாணக் குறிப்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் உட்படுவதோடு அரசசேவை நியமனம் நிர்வாகம் செய்யப்படுகின்ற பொது நிபந்தனைகளுக்கு உட்படுவதுடன் விண்ணப்பதாரிகள் வகுப்பின் IIIஆம் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

(ii) இந்த நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதும், விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(iii) இந்த பதவிகளுக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஓராண்டு பதில்கடமை புரிதலுக்கு உட்படுத்தப்படுவர்.

(iv) பொது ஊழியர் எண்ணிக்கைக்கு நியமிக்கப்படுபவர் அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் குறைந்தபட்சம் மூன்று வருட காலம் அரச பாடசாலையின் அதிபராக சேவையாற்றாது இருப்பின் அவ்வாறு நியமிக்கப்பட்டு மூன்று வருட காலத்திற்குள் அரச பாடசாலையின் அதிபராகக் கட்டாயமாகச் சேவையாற்றியிருக்க வேண்டும். எவரேனும்

ஒரு நபர் அவ்வாறு சேவையாற்றிய கால எல்லை மூன்று வருடங்களை விடக் குறைவான சந்தர்ப்பங்களில் அவ்வாறு நியமிக்கப்பட்டதன் பின்னர் பூர்த்தி செய்ய வேண்டிய காலத்தை முன்னர் அல்லது அவரினால் சேவையாற்றிய காலம் மற்றும் மூன்று வருட காலத்துக்கு இடைப்பட்டதான மாற்றங்களுக்கு சமமாக இருக்க வேண்டும்.

(v) III ஆம் வகுப்பு பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவைக்கு அமைய மத்திய அரசின் பதவிகளில் அல்லது மாகாண அரச சேவையின் பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவர்.

(vi)

| மொழி | அடைய வேண்டிய தேர்ச்சிகள் |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன் ஓர் அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சுற்றறிக்கை அம்சங்களின் உரிய மட்டத்தின் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| இணைப்பு மொழியில் தேர்ச்சி : | சேவையில் இணைந்த உத்தியோகத்தரொருவர், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) வருடங்களுக்குள் இணைப்பு மொழியில் (ஆங்கில மொழி) தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இணைந்த மொழிப் பரீட்சை தொடர்பாக இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் அத்தியாயம் 7 இல் உள்ளது.<br><br>**குறிப்பு**.- உத்தியோகத்தரொருவர் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கு திறமைச் சித்தியை அல்லது உயர் சித்தியை அடைந்திருப்பின் இணைப்பு மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஆங்கில மொழி மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் இத் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |

(vii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் அரச சேவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பும், அதற்கு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களும், நிபந்தனைகளும் இப்பதவிக்கு உரியதாகும்.

3. ***சம்பள அளவுத்திட்டம்***.- இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 கொண்ட சம்பள சுற்றுநிருபத்துக்கு ஏற்ப SL-1-2006 ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டத்துக்கு உரித்தாகும்.

4. ***தகைமைகள்***.- (அ) பின்வரும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அரச பாடசாலைகளின் அரச அங்கீகாரம் பெற்ற உதவி பெறும் பாடசாலைகளில் மற்றும் பிரிவெனாக்களில் சேவை உறுதி செய்யப்பட்ட ஆசிரியர்கள்/ அதிபர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெறுகின்றார்.

***குறிப்பு***.- இவ் அனுசரணையானது, அரசாங்கத்தினால் உதவி வழங்கப்படுகின்ற பாடசாலைகளிலும், பிரிவெனாக்களிலும் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவதற்கான உரிமையாக மாட்டாது.

4.1 ***கல்வித் தகைமைகள் :***

(அ) பொதுச்சேவை பதவியணியினருக்காக-

(i) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் கூடிய ஆசிரியராய் இருத்தல் ; அல்லது

(ii) தேசிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழ் ; அல்லது ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியராய் இருத்தல் ; அல்லது

(iii) இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவராய் இருத்தல்.

(ஆ) ***விஷேட பதவியணியினருக்காக :***

(i) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் பெறப்பட்ட உரிய பாடத்தை உள்ளடக்கிய பட்டம் பெற்ற ஆசிரியராய் இருத்தல் ; அல்லது

(ii) உரிய பாடத்தில் ஆசிரிய பயற்சி சான்றிதழ் அல்லது உரிய பாடத்தில் தேசிய போதனாவியல் டிப்ளோமா கொண்ட ஆசிரியராய் இருத்தல் ; அல்லது

(iii) தொழில்நுட்பவியல் விடயப்பரப்பின் கீழ் பொறியியல் தொழில்நுட்ப விடயப் பாடப்பரப்பிற்காக இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொரட்டுவை பல்கலைக்கழகம் வழங்குகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்கா பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDES) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா (DT) அல்லது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் 6க்குரிய உயர் டிப்ளோமா (NVQ level 6) கொண்ட ஆசிரியராதல்.

5. **அனுபவம் :**

(அ) ***பொதுச்சேவை பதவியணியினருக்காக-***

(i) பட்டத்தகைமையுடன் கூடிய ஆசிரியரெனில் ஆகக்குறைந்தது கிட்டிய ஐந்து (5) ஆண்டுகளில் தொடர் சேவை மற்றும் திருப்திகரமான கற்பித்தல் அனுபவம் ; அல்லது

(ii) ஆசிரிய பயிற்சி சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா உடன் கூடிய ஆசிரியராயின் ஆகக்குறைந்தது கிட்டிய ஏழு ஆண்டுகள் (7) தொடர் சேவை மற்றும் திருப்திகரமான கற்பித்தல் அனுபவம் இருத்தல் ;

(iii) ஆசிரிய பயிற்சி சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா கொண்ட பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியராயின் கிட்டிய ஐந்து ஆண்டுகள் (5) தொடர் சேவை மற்றும் திருப்திகரமான கற்பித்தல் அனுபவம் இருத்தல் ; அல்லது

(iv) இலங்கை அதிபர் சேவைக்குரிய பதவிகளில் கிட்டிய ஐந்து (5) தொடர் மற்றும் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள அதிபர் சேவை உத்தியோகத்தராயிருத்தல்.

(ஆ) ***விஷேட பதவியணியினருக்காக-***

(i) குறித்த பாடப்பரப்பைக் கொண்ட பட்டதாரி ஆசிரியராக ஐந்து (5) ஆண்டுகள் தொடர் சேவையைக் கொண்ட பட்டதாரி தகைமையைக் கொண்ட ஆசிரியராயின் ஆகக்குறைந்தது கிட்டிய ஐந்து (5) ஆண்டுகள் தொடர் சேவையும் மற்றும் திருப்திகரமான குறித்த பாடப்பரப்புக்குரிய கற்பித்தல் அனுபவமும் இருத்தல் ; அல்லது

(ii) குறித்த பாடப்பரப்புக்குரிய பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுக்குரிய ஆசிரியர் ஒருவர் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் குறித்த பாடப்பகுதிக்குரிய பட்டதாரியாகவும் கிட்டிய ஐந்து (5) ஆண்டுகளில் தொடர்சேவை மற்றும் திருப்திகரமான உரிய விடயப்பரப்பு கற்பித்தல் அனுபவமும் இருத்தல் ; அல்லது

(iii) குறித்த பாடத்துறைக்குரிய ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் கூடிய ஆசிரியராயின் ஆகக்குறைந்தது கிட்டிய தொடர் ஏழு (7) ஆண்டுகள் மற்றும் திருப்திகரமான உரிய விடயப்பரப்பு கற்பித்தல் அனுபவமும் இருத்தல் ;

(iv) எவ்வாறாயினும் விஷேட கல்வி /தொழில்நுட்ப கல்வி /உடற்கல்வி /மேலைத்தேய சங்கீதம் போன்ற விடயப் பரப்புக்கு உரித்தான ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமாவுடன் கூடிய ஏழு ஆண்டுகளுக்கு (7) குறைவில்லாத சேவைக் காலத்தைக் கொண்ட ஆசிரியராயின் விடயத்திற்கு அல்லது விடயப்பரப்புக்குரிய ஆசிரிய நியமனம் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது கிட்டிய ஐந்து (05) ஆண்டினுள் குறித்த பாடப்பரப்பினை தொடர்ச்சியாக கற்பித்த அனுபவம் பெற்றிருத்தல் ;

(v) பொறியியல் தொழில்நுட்ப விடயப்பரப்பின்கீழ் விண்ணப்பிப்பவர்களுக்காக ஆசிரியர் சேவையின் உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஆகக்குறைந்தது கிட்டிய மூன்று (3) ஆண்டுகள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான உரிய பாடப்பரப்பைக் கற்பித்தல் அனுபவம் இருத்தல்.

6. **வயதெல்லை.-** விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 50 வயதிற்குக் கூடாதிருத்தல்

7. **தேகாரோக்கியம்.-** சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றல் மற்றும் பதவிக்குரிய பணியினை மேற்கொள்ளத் தேவையான உடல், உள பொருத்தப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. **வேறு தகைமைகள் :**

(i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் எந்தவொரு விண்ணப்பதாரியும் மூன்று தடவைக்கு மேலே தோற்றுவதற்கு அனுமதியில்லை என்பதுடன் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை இரண்டிலும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்குமிடத்து மொத்தமாக ஐந்து தடவைக்கு மேல் எந்தவொரு பரீட்சார்த்தியும் தோற்றுவதற்கு அனுமதி இல்லை ;

(ii) இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று பூர்த்தி செய்திருக்க வேண்டும் ;

(iii) சகல விண்ணப்பதாரிகளும் தாங்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுகின்ற சேவையின் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பிப்பதற்கு தகைமை பெற்றிருக்கும் சேவையின் நியமனம் உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(v) கிட்டிய 5 வருடங்களினுள் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) சேவையின் III ஆம் தரத்திலான சேவையாளர் எண்ணிக்கை பொதுச்சேவையாளர் எண்ணிக்கையில் இருந்தும் விஷேட சேவையாளர் எண்ணிக்கையில் இருந்தும் நிரப்பப்படும். ஒரு விண்ணப்பதாரிக்கு பொதுச்சேவையாளர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக விஷேட சேவையாளர் எண்ணிக்கையின் கீழ் விண்ணப்பிப்பதாயின் அதன் 4.1 (ஆ) இன் தகைமைகளை பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதோடு பட்டத்துக்காக கற்ற மொத்த பாட அலகுகளின் எண்ணிக்கையில் 1/3 பகுதியாவது விண்ணப்பிக்கின்ற பாடத்துக்கு உரிய பாடங்களாக இருத்தல் வேண்டும்.

(ii) ஒரு விண்ணப்பதாரி பொதுச்சேவை பதவியணி எண்ணிக்கைக்கும் விஷேட சேவை எண்ணிக்கையின் பல பாடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பாடத்தைத் தீர்மானிக்கும் உரிமை அரச சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

(iii) விஷேட சேவையாளர் எண்ணிக்கையின் பாடப்பரப்பும் அவற்றுக்குரிய குறியீட்டு இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. தாம் விண்ணப்பிக்கும் பாடப்பரப்பையும் அதற்குரிய குறியிடல் இலக்கத்தையும் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

| | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| (அ) பொதுவான பதவியணி | 11 |
| (ஆ) விசேட பதவியணி | |
| ***பாடப்பரப்பு :*** | |
| சிங்களம் | 21 |
| தமிழ் | 22 |
| ஆங்கிலம் | 23 |
| கணிதம் | 24 |
| விஞ்ஞானம் | 25 |
| வணிகக்கல்வி | 26 |
| தகவல் தொழில்நுட்பம் | 27 |
| உடற்கல்வி | 28 |
| பௌத்த சமயம் | 29 |
| கிறிஸ்தவ சமயம் | 30 |
| இந்து சமயம் | 31 |
| இஸ்லாமிய சமயம் | 32 |
| மாணவர் அறிவுரையும் வழிகாட்டலும் | 33 |
| சங்கீதம் (கீழைத்தேய) | 34 |
| நடனம் | 35 |
| சித்திரம் | 36 |
| விஷேடகல்வி | 37 |
| திட்டமிடல் | 38 |
| ஆரம்பக்கல்வி | 39 |
| வரலாறு | 40 |
| விவசாய விஞ்ஞானம் | 41 |
| மனைப்பொருளியல் | 42 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 43 |

**கவனிக்க :**

| | பாடம் | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|---|
| 1. | சிங்களம் | (i) குறித்த பாடத்திற்குரிய பட்டம் அல்லது பட்டத்தின் ஒரு பகுதியாக குறித்த பாடத்தைப் பிரதான பாடமாக பின்பற்றியிருத்தல். மொத்தப் பாட அலகுகளின் எண்ணிக்கையில் 1/3 பகுதியையேனும் விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதாகப் பின்பற்றியிருத்தல். (நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்கள் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும்.) |
| 2. | தமிழ் | |
| 3. | ஆங்கிலமும் பிற மொழிகளும் | |
| 4. | கணிதம் | |
| 5. | விஞ்ஞானம் | |
| 6. | வணிகக்கல்வி | |

| | பாடம் | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|---|
| 7.<br>8.<br>9.<br>10.<br>11.<br>12.<br>13. | தகவல் தொழில்நுட்பம்<br>உடற்கல்வி<br>பௌத்த சமயம்<br>கிறிஸ்தவ சமயம்<br>இந்து சமயம்<br>இஸ்லாமிய சமயம்<br>மாணவர் அறிவுரையும் வழிகாட்டலும் | (ii) குறித்த பாடத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழை அல்லது குறித்த பாடத்திற்குரிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் |
| 14. | அழகியற் கலை | குறித்த பாடத்திற்குரிய பாடமாக இருப்பது சித்திரம், நடனம், கீழைத்தேய சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், நாடகமும் அரங்கியலும் பாடத்துறையில் பெற்ற பாடமாகும். |
| 15. | தொழில்நுட்பவியல் (உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம்) | (i) குறித்த பாடத்திற்குரியதாக விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டம் அல்லது மனையியல், நெசவுக் கைத்தொழில் தொழில்நுட்பம், மொழித்திறன் தொடர்பான ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது போதனாவியல் டிப்ளோமா பெற்றிருத்தல் ;<br><br>(ii) தொழில்நுட்பவியல் விடயப்பரப்பின் கீழ் பொறியியல் தொழில்நுட்ப விடயப் பாடப்பரப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் பட்டம் அல்லது இயந்திரவியல் கட்டுமானம் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் போன்ற துறைகளில் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொள் ளப்பட்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகம் வழங்குகின்ற மூன்று ஆண்டுகளைக் கொண்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் நான்கு வருட பொறியில் விஞ்ஞானம் தொடர் பான தேசிய டிப்ளோமாவை (NDES) பெற்றிருத்தல். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படுகின்ற தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா (DT) அல்லது இலங்கை மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப தகைமை மட்டம் 6 க்குரிய உயர் டிப்ளோமா (NVQ Level 6) பெற்றிருத்தல். |
| 16. | விசேட கல்வி | (i) விசேட கல்வி தொடர்பான கல்விமாணி, கல்வி முதுமாணி, கலைமாணிப்பட்டம் பெற்றிருத்தல். |
| | | (ii) விசேட கல்வி தொடர்பாக அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றிலிருந்து ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| | | (iii) கல்விக் கல்லூரியொன்றின் மூலம் விசேட கல்வி தொடர்பான போதனாவியல் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல். |

| | பாடம் | ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் |
|---|---|---|
| 17. | திட்டமிடல் | கீழ்க் குறிப்பிடப்பட்ட பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்தையேனும் பிரதான பாடமாகப் பின்பற்றி அதில் சித்தியெய்தி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் எந்தவொரு பட்டத்தையும் பெற்றிருத்தல்<br><br>பாடங்கள் :<br><br>* புள்ளி விபரவியல்<br>* கணிதம்<br>* முகாமைத்துவம்<br>* கல்வியியல், மூலதத்துவங்கள், ஒப்பீட்டுக் கல்வி<br>* சமூகவியல்<br>* உயிரியல்<br>* பௌதீகவியல்<br>* பொருளியல் |
| 18. | ஆரம்பக் கல்வி | (i) ஆரம்பக் கல்வி தொடர்பான கல்வி மாணி, கல்வி முதுமாணி, கலை முதுமாணிப் பட்டம் பெற்றிருத்தல்<br><br>(ii) ஆரம்பக் கல்வி தொடர்பாக அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றிலிருந்து ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்<br><br>(iii) கல்விக் கல்லூரியொன்றின் மூலம் ஆரம்பக் கல்வி தொடர்பான கற்பித்தலில் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருத்தல் |
| 19. | வரலாறு | வரலாற்றைப் பாடமாகக் கொண்ட பட்டம் பெற்றிருத்தல் |

10. **ஆட்சேர்ப்பு முறை :**

10.1 ***எழுத்துப் பரீட்சை :***

10.1.1 இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

10.1.2 *பாடத்திட்டம்.-* எழுத்துப் பரீட்சை மூன்று (03) வினாப்பத்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 40% ஆன புள்ளியினை பெறுதல் வேண்டும்.

(i) ***பொது அறிவும் நுண்ணறிவும்*** - நேரம் 1 மணித்தியாலம் 30 நிமிடம்(100 புள்ளிகள்)
பாடஇலக்கம் - 01
நுண்ணறிவு பரீட்சை வினாக்கள் மூலம் பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றலை மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார பொருளாதாரச் சூழல், வேலைசெய்யும் சூழல், தேசிய, சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தற்கால நிகழ்வுகள், அதேபோன்று விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிப்பதற்கு பொது அறிவு வினாக்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவை பல்தேர்வு மற்றும் குறுகிய விடை மாதிரியிலான 60 வினாக்களைக் கொண்டிருக்கும். (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்)

(ii) ***ஒப்பீட்டுக் கல்வி*** - நேரம் 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
பாட இலக்கம் 02
இவ்வினாப்பத்திரத்தில் இலங்கைக் கல்விக்கொள்கைகள்,கட்டமைப்புக்கள், அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டுள்ள விதம், அண்மைக்கால எழுச்சிகள், பிற நாடுகளின் கல்வி முறைமைகள் தொடர்பிலானஅறிவை ஒப்பீட்டளவில் மதிப்பீடு செய்வதற்கு இவ்வினாப்பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்)

(iii) ***கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும்*** - 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
கல்வி நிர்வாகம்/முகாமைத்துவத் துறையில் எழக்கூடிய ஒருசில சம்பவங்களை முன்வைத்து, அச் சம்பவங்களுக்குப் பதில் அளித்தல், பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு, ஆற்றலைப் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டு வினாக்கள் முன்வைக்கப்படும். (சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படும்)

10.2 ***வாய்மொழிப் பரீட்சை :***

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரிகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக அறிவு, தர்க்கவலிமை, பிரச்சினை தீர்த்தல், தொடர்பாடல் திறன் மற்றும் ஆளுமையை பரிசீலிப்பதற்காக பின்வரும் புள்ளித்திட்ட அடிப்படையில் வாய்மொழிப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் வழங்கப்படுகின்ற உச்ச புள்ளிகள் 25 ஆகும்.

| பாடப்பரப்பு | உச்ச புள்ளிகள் |
|---|---|
| 1. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான அறிவு | 07 |
| 2. தர்க்கவலிமையும் பிரச்சினை தீர்த்தலும் | 07 |
| 3. தொடர்பாடல் திறன் | 07 |
| 4. ஆளுமை | 04 |
| மொத்தம் | 25 |

(ii) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலுள்ள 1 இல் காட்டப்படுகின்ற எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையாக இல்லாவிட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் வாய்மொழிப் பரீட்சைக்காக தகைமை பெற்றோர் மாத்திரமே அழைக்கப்படுவர்.

(iii) வாய்மொழிப் பரீட்சைக்கு முன்னர், தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ததாக உறுதிசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகைமை பெறுவர். மேலுள்ளவாறு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளிடையே எந்த தொகையினரும் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதி பெறாவிட்டால், அவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

10.3 ***பரீட்சைப் பெறுபேறு வெளியிடல்.***- இந்த அறிவித்தலின் 1 (அ) பந்திக்கு ஏற்ப எழுத்துப் பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை இரண்டுக்கும் தோற்றி அவற்றில் அதிகூடிய புள்ளிகள் பெற்றவர்களின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்படும் பெறுபேற்று அட்டவணை செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகளை அனுப்புதல் அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

11. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் விருப்பமான ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழிமூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(v) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

வர்த்தமானிஅறிவித்தலில்குறிப்பிடப்பட்டுள்ளதகைமைஉடையவர்கள்மாத்திரம்விண்ணப்பித்திருப்பார்கள்என்றஎண்ணத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்டவர்கள் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கோ அத்திகதிக்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம், விண்ணப்பிக்கின்ற ஆளணி வகை மற்றும் அதற்குரிய தகவல்கள் அடங்கிய அட்டவணையைப் பூர்த்தி செய்து விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் அதிபரின் உறுதிப்படுத்தல், திணைக்களத்தலைவரின் உறுதிப்படுத்தலுடன் சரியாக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம் அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப்பொறுப்பாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.

பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் எனக் கருத முடியாது.

(vi) விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்ரி மீற்றர் அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் 01 - 04 வரையான தலைப்புக்கள் முதற் பக்கத்திலும் 5 மற்றும் 6 தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்துக்கும் எஞ்சியவை மூன்றாவது நான்காவது பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனமளிக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரியினால் விசாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு, அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறிவிக்கின்றேன்.

(vii) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்த ஐந்து தினங்களுக்கு முன்னராவது அனுமதிப் பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்தி இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சார்த்தி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் உள்ளவராயின் மேற்படித் தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திர பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பிவைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு என்பவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனளிக்கும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் பரீட்சையை ஒத்தி வைத்தல் அல்லது இரத்துச் செய்யும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குரியதாகும்.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

(x) ***பரீட்சார்த்தியின் அடையாளம்.***- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு :**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எந்த கடிதங்களோ அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.

(ஆ) கேட்கப்படும் போது ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

(xi) பரீட்சார்த்தியொருவருக்கு தகுதி இல்லை என வெளிப்படின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ, பரீட்சைக்குப் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்தினை இரத்துச் செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் அல்லது ஏதேனும் ஒரு முக்கியவிடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்த சந்தர்ப்பம் உண்டு.

அரச சேவையில்/மாகாண அரச சேவையில் /அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களம் /நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(xii) இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

12. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலின் மொழிபெயர்ப்பில் வேறுபாடுகளிருப்பின் அச்சமயத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலையே சரியானதாக கருதுப்படும்.

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2015.12.18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் தரத்துக்கு (பொதுப் பதவியணி/விசேட பதவியணி) சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 /2016**

Limited Competitive Examination for Recruitment to Grade III (*General* / Special) of the Sri Lanka Education Administrative Service – 2015 /2016

(வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஆளணி எண்ணிக்கை :

பொதுப் பதவியணிமட்டும் - 1
விசேட பதவியணி மட்டும் - 2
பொது மற்றும் விஷேட பதவியணி இரண்டிற்கும் - 3

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவியணித்தொகை/ விஷேட பதவியணி தொகையுடன் பாடத்துறையின் குறியீட்டு இலக்கத்தை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடவும். (வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக)

| பதவியணி தொகையின் பெயர் | பாடத்துறையின் பெயர் | குறியீட்டு இல. |
|---|---|---|
| பொது | ////////////////////////////////// | |
| விஷேட | | |
| விஷேட | | |

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : -------------.
(உதாரணம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 இறுதியாக வரும் பெயர் ஆரம்பத்திலும், அடுத்த பெயர்களின் முதல் எழுத்துக்களை இறுதியாகவும் எழுதவும்.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உதாரணம் : GUNAWARDENA, H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ---------------

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ------------

2.2 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) - -------------------.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) - ----------.

2.4 அலுவலக தொலைபேசி இலக்கம் (இருப்பின்) : ---------------

2.5 நிரந்தர முகவரி (சிங்களம் /தமிழில்) -------------------.

2.6 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3. ஆண் /பெண் தன்மை :

ஆண் - 0
பெண் - 1

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

5. 5.1 தேசிய இனம் :
சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
ஏனையவர்கள் - 5

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5.2. விவாக நிலை :
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5.3 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

5.4 2016.02.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

6. கல்வித் தகைமை :

(அ) (i) பட்டம் அல்லது ஏனைய தகைமை பெற்றுக்கொண்ட திகதி : ------..
(செல்லுபடியாகும்திகதி)
(ii) பட்டம் அல்லது வேறு தகைமை (பெயர்) : --------------.
(iii) கற்ற முக்கிய பாடங்கள் : --------------------.
(iv) கற்ற பல்கலைக்கழகம்/நிறுவனம் : ----------------
(v) வெளிவாரி/உள்வாரி : ---------------------.

(ஆ) (i) பட்டப்பின் பட்டத்தில் சித்தியடைந்த ஆண்டு : ------------.
(ii) பட்டப்பின் பட்டம் : -----------------------..
(iii) கற்ற பாடங்கள் : --.---------------------
(iv) பல்கலைக்கழகம்/நிறுவனம் : ------------------

7. (i) ஆசிரியராக முதலில் அரச சேவையில் இணைந்துகொண்ட ஆண்டு : -------
(ii) ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ள விடயப்பரப்பு :----.---------
(iii) தற்போது சேவையாற்றும் கல்வி வலயம் : -----------------
(iv) 2016.02.01ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

8. (i) ஆசிரிய பயிற்சி பெற்ற ஆண்டு : --------------------
(ii) தேசிய கல்வியியற் கல்லூரி /ஆசிரிய கலாசாலையின் பெயர் :---------
(iii) பயிற்சிச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :---------------.
(iv) பயிற்சி பெற்ற விடயத்திற்கு அமைவாக ஆசிரிய நியமனம் பெற்ற திகதி :-----.
(v) அந்த நியமன திகதியிலிருந்து 2016.02.01 ஆந் திகதி வரை சேவைக்காலம் :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

9. நீங்கள் தற்போது வகிக்கும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? -----------...

10. நீங்கள் அரச சேவையில் உள்வாங்கப்படுவதற்காக தகுதிபெற்ற பரீட்சை மொழி :-----

11. பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்துக்கொள்ளவும்) |

12. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு அல்லது திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய தடவைகளின் எண்ணிக்கை மற்றும் வருடம்

| பரீட்சை | ஆண்டு | தடவைகள் |
|---|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட | | |
| திறந்த | | |

13. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையெனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய ------ ஆம் இலக்க ----- ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைச் சட்டதிட்டத்திற்கு அமைவாக செயற்படுவதற்கும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும் இப்பரீட்சை சட்டதிட்டத்திற்கு அமைவாக நான் தகைமையற்றவன் எனக் கருதப்படுமிடத்து பரீட்சைக்கு முன் அல்லது நடைபெறும்போது எனது விண்ணப்பத்தினை இரத்துச் செய்வதற்கு அல்லது எனக்கு எதிராக எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன். நான் இப்பதவியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் தகுதியற்றவன் என கருதப்படுமிடத்து சேவை இறக்கம் செய்வதற்கும் இணங்குகிறேன்.

------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-------

வலயக் கல்விப் பணிப்பாளர்,

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் வண./ திரு./ திருமதி/ செல்வி -------------------- எனது கல்லூரியில் சேவையாற்றுவதாக இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

-------------,
அதிபரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :-------

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

இவ்விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கின்ற வண./ திரு./திருமதி/செல்வி ------------------------ எனது வலயத்தின் --------- கல்லூரியில் சேவையாற்றும் ஆசிரியர் என்றும் இலக்கம் 05 இல் இருந்து 13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அலுவலகத்திலுள்ள அவரின் சொந்தக் கோவைக்கு அமையச் சரியானது எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

-------------,
வலய கல்விப் பணிப்பாளர்/மாகாண கல்விப் பணிப்பாளர்.
(பதவி முத்திரை)

திகதி :-------

1-266/1

---

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்**

சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை– 2015/2016

சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவி வெற்றிடங்களில் காணப்படும் பொது ஊழியர் எண்ணிக்கையின் 118 வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைபெற்ற கீழ் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல தகைமைகளும் விண்ணப்பம் கோரும் இறுதித் தினமன்று பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின்

III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை – 2015/2016" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2016.02.01

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**1. சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிமுறைகள் :**

(அ) எழுத்து மூலப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் மற்றும் சேவை அனுபவம் ஆகிய இரு துறைகளிலும் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளை இணைத்து தகைமைத் தொடருக்கமைய சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை, பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட தகைமைகள் இருக்கின்றதா எனப் பரிசீலனை செய்ததன் பின்னர் நியமனத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்நியமனங்கள் அமுல்படுத்தப்படும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடத்தை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

(ஆ) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லையாயின், திறமைத் தொடருக்கமைய பட்டியலில் அடுத்த விண்ணப்பதாரரின் தகைமையினைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**2. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.21 ஆந்திகதிய 1928/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்குப் பின்னரும் மேற்கொள்ளும் சீர்திருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனத்தை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்தி இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் III தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியச் சம்பளம் கொண்டது. விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும்.

(iii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் (01) வருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படும்.

(iv)

| மொழி | அடைய வேண்டிய தேர்ச்சிகள் |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன் ஓர் அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சுற்றறிக்கை அம்சங்களின் உரிய மட்டத்தின் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| இணைப்பு மொழியில் தேர்ச்சி: | சேவையில் இணைந்த உத்தியோகத்தரொருவர், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழியில் (ஆங்கில மொழி) தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இணைந்த மொழி பரீட்சை தொடர்பாக இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் அத்தியாயம் 7ல் உள்ளது.<br>**குறிப்பு**:<br>உத்தியோகத்தரொருவர் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கு திறமைச் சித்தியை அல்லது உயர் சித்தியை அடைந்திருப்பின் இணைப்பு மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஆங்கில மொழி மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் இத் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |

(v) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரச நிதிக் கோவைகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய உத்தரவுகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டிருக்கும்.

(vi) இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவைக்கமைய மத்திய அரசு அல்லது மாகாண அரச சேவையின் பொது ஊழியர் எண்ணிக்கையின் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

*3. **சம்பள அளவு**.- இப் பதவிக்குரிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இற்கமைய SL-1- 2006 ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1050 - ரூபா 53,555 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும்.*

*4. **தகைமைகள்**.- கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்டுள்ள தற்போது சேவையில் உள்ள இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்கள் சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கான பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறுவர்.*

(i) இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தில் குறைந்தபட்சம் மூன்று வருட சேவைக்காலத்தை கொண்டிருத்தல். (03 வருட சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்ற இறுதித்தினத்திலாகும்)

(ii) இலங்கை அதிபர் சேவையில் நிரந்தரப்படுத்தப்படிருத்தல்.

(iii) இலங்கை அதிபர் சேவைக்கு உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து அல்லது அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல்.

(iv) சகல விண்ணப்பதாரர்களும் திருப்திகரமான மற்றும் தொடர்ச்சியான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

***குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்தினைக் கோரும் இறுதித் தினம்வரை சேவையில் இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கத் தகைமையற்றவராவார். பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.*

5. **வேறு தகைமைகள் :**

*5.1 உடற்தகைமை :*

(i) சகல விண்ணப்பதாரர்களும் சிறந்த நன்னடத்தை மற்றும் தேகாரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் உளத் தகைமை இருக்க வேண்டும்.

*5.2 ஏனைய தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு மூன்று (03) தடவைகளைவிடக் கூடுதலாகத் தோற்றுவதற்கு எந்தவொரு பரீட்சாத்திக்கும் அனுமதி இல்லை என்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை அனுபவம் உட்பட திறமை அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்காக இரு பரீட்சைகளுக்கும் ஐந்து தடவைகளை விட (5) தோற்றுவதற்கு எந்தவொரு பரீட்சாத்திக்கும் அனுமதி இல்லை.

(iv) இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைய இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கான சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

6. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று 55 வயதை விடத் தாண்டாது இருக்க வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

7.1 ***எழுத்துமூலப் பரீட்சை**.-* இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்

*7.1.1 பாடவிதானம்.- எழுத்து மூலப் பரீட்சைக்கான வினாத்தாள் (2) இரண்டினைக் கொண்டமைந்திருக்கும். சகல பாடங்களிலும் சித்தியடைவதற்காக 40% குறைந்தபட்சப் புள்ளியினைப் பெற்றிருக்க வேண்டும்.*

(i) ஒப்பீட்டுக் கல்வி – நேரம் 01 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்
(பாட இலக்கம் 01)

இலங்கை கல்விக் கொள்கைச் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், கல்வி நிறுவனங்களின் பணிகள், சமீப காலக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் சர்வதேச முன்னேற்றங்கள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியில் மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய வகையில் 50 வினாக்களைக் கொண்டமைந்துள்ளதுடன் சகல கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) *கல்வி தொடர்பான சம்பவக் கற்கை - நேரம் 01 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்*
*(பாட இலக்கம் 02)*

*கல்வி நிர்வாகம் / முகாமைத்துவத் துறையில் ஏற்படக்கூடிய பல சம்பவங்களைச் சமர்ப்பித்து அச்சம்பவங்களுக்கு வரவேற்பளித்தல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் பரீட்சாத்தியின் இயலுமையினை அளவீடு செய்யும் நோக்குடன் இவ்வினாத்தாள் சமர்ப்பிக்கப்படுகின்றது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.*

*7.2* ***சேவை அனுபவத்திற்காகப் புள்ளி வழங்கும் முறை :***

*சேவை அனுபவம்.- இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தின் திருப்திகரமான சேவைக்காலம், ஆட்சேர்ப்புக்குத் தேவையான அடிப்படைத் தகைமையாகப் பணிக்கப்பட்டுள்ள மூன்று வருடங்களைக் குறைத்ததன் பின்னர் அதற்கு மேலதிகமாக I ஆம் தரத்தில் சேவையாற்றியுள்ள சகல தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்திற்காக ஒரு வருடத்திற்கு 3 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 60 புள்ளிகள் சேவை அனுபவத்திற்காக வழங்கப்படும். (புள்ளி வழங்கல் முழு ஆண்டுக்காக மாத்திரமாகும்)*

*7.3* ***பொதுவானநேர்முகப் பரீட்சை.-*** *ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகள் மற்றும் ஆட்சேர்ப்பிற்காகப் பகிரங்கப் படுத்தப்படும் அறிவித்தலில் தகைமைகள் இருக்கின்றதா என்பது தொடர்பில் இதன் மூலம் பரிசீலனை செய்யப்படும்*

(i) *சேவை அனுபவம் மற்றும் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கு அமைய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உரிய எண்ணிக்கையினருக்கு மாத்திரம் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.*

(ii) *தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பின் ஏதேனும் ஒரு வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் தகைமைத் தொடருக்கு அமைய பட்டியலில் அடுத்த பரீட்சார்த்தியூடாக வெற்றிடம் நிரப்பப்படும்.*

(iii) *வெட்டுப்புள்ளியில் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளில் ஒருவரை விடக் கூடுதலாக இருப்பின் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.*

(iv) *இதன் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையூடாக பரீட்சார்த்திகளின் தகைமைகள் பரிசீலனை செய்யப்படுவதுடன் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.*

*8.* ***பரீட்சைப் பெறுபெறுகளை வெளியிடல்.-*** *இவ்வறிவித்தலில் 1 (அ) மற்றும் 1 (ஆ) வாசகத்திற்கமைய எழுத்து மூலம் மற்றும் வாய்மொழி மூலம் ஆகிய இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றி அதில் உயர் சித்திகளைப் பெற்றோரின் திறமைத் தொடருக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது இலங்கை பரீட்சை திணைக்களத்தின்* www.results.exams.gov.lk *என்ற இணையத்தளம் ஊடாக வெளியிடப்படும்.*

*9.* **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) *பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஏதேனும் ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.*

(ii) *பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக் கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலக அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.*

(iii) *பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.*

(iv) *இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.*

(v) *முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.*

*வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி "விண்ணப்பிக்கும் ஊழியர் எண்ணிக்கை" மற்றும் அதற்குரிய தகவல்கள் அடங்கும் அட்டவணையினைப் பூரணப்படுத்தி விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தலும் உரியதாயின் மாத்திரம் திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிய விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.*

**குறிப்பு**.- அனுமதிப் பத்திரமின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் மத்திரமாகும்.

(vi) விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்ரிமீற்றர் அளவில் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் 1 – 3 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், எஞ்சியவை இரண்டாம் மற்றும் மூன்றாவது பக்கத்திலுமாகத் தயாரிக்கப்படவேண்டியதுடன் உரிய தகவல்களை தமது கையெழுத்தின் ஊடாகத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் அறியத்தருகிறேன்.

(vii) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைத் தினத்திற்கு குறைந்த பட்சம் ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினைத் துரித கதியில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாக அமையும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் இட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(viii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு இணங்க பரீட்சை ஒத்தி வைக்க அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

(x) *பரீட்சார்த்தியின் அடையாளங்கள்*.- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் ஒரு ஆவணம் அல்லது பிரதியினை இணைக்கக் கூடாது.

(ஆ) கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் விண்ணப்பம் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(xi) பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்த்தினை இரத்துச் செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்த சந்தர்ப்பம் உள்ளது.

(xii) அரச சேவை / மாகாண அரச சேவையில் / அரச கூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களம் / நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப் படிவங்களை அனுப்ப வேண்டும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தேர்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு விடயத்தைத்தெரிந்தும் மறைத்திருப்பின் சேவையிலிருந்து இடைநிறுத்த இடமுண்டு.

(xiii) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட இவ்வறிவித்தலில் மொழிமூலங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் இருப்பின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

டபிள்யு. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2015, திசெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**சேவை அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை -2015/2016**

Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Education Administrative Service on the Basis of Service Experience and Merit – 2015/2016

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)
1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ+ம் : GUNAWARDENA, H.M.S.K)
1.3 முழுப் பெயர் (சிங்களம் / தமிழில்) :----.

2. 2.1 தற்போதைய சேவை நிலையம் மற்றும் அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.3 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.
2.4 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 ஆண்/பெண் பால் :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 தேசிய இனம் :
சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம்கள் - 4
ஏனையவர்கள் - 5

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 தேசிய ஆள் அடையாள அட்டை இல.

4. (i) பிறந்த திகதி –

ஆண்டு மாதம் திகதி

(ii) 2016.02.01 ஆந் திகதியன்று வயது –

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

(iii) திருமணமாகாதவர் / திருமணமானவர் -
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5. சேவை விபரம் -

5.1 முதல் நியமனப் பதவி மற்றும் முதல் நியமனத் திகதி :----.

5.2 தற்போது தாங்கள் உள்ளடங்கும் மாகாணக் கல்வி அலுவலகம்/வலயக் கல்வி அலுவலகம் :----.

5.3 அதிபர் பதவியின் I ஆந் தரத்துக்காக நியமனம் பெற்ற திகதி :----.

6. கல்வித் தகைமை :----.

7. தொழிற் தகைமை :----.

8. பங்கேற்றுள்ள பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் :----.

9. விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று அண்மித்த ஐந்து வருடங்களுக்குள் குற்றமொன்றுக்குப் பெற்ற ஏதேனும் ஒரு முறையிலான அல்லது (எச்சரிக்கை தவிர) தண்டனைகள் தொடர்பான விபரங்கள் :----.

10. 10.1. விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தின் அண்மித்த ஐந்து வருடங்களுக்குள் சகல சம்பளப்படி உயர்வுகளும் பெறப்பட்டுள்ளதா? :----.

10.2. பெறப்படாதிருப்பின் அதற்கான காரணம் :----.

11. தங்களுக்கு எதிராக தற்போது ஏதேனும் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டிருப்பின் அது தொடர்பான தற்போதைய நிலைமைகள் : ----.

12. கடந்த 05 வருடங்களுக்குள் சம்பளமின்றி அல்லது அரைச்சம்பள விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் :----.

13. பரீட்சைக் கட்டணம் :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சரியாக இங்கு ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்துக் கொள்ளவும்) |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு அனுபவம் மற்றும் தகைமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்காக கருத்திற்கொள்ள நான் தகைமை கொண்டவர் என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது என்றும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

மேற்கூறப்பட்ட 05 தொடக்கம் 12 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை விபரங்கள் தனிப்பட்ட கோவைக்கமைய சரியானது என உறுதிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணமாக 1,000 ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகிறேன்.

வலயக் க.ப./மாகாண க.ப./மாகாண க.செ.
(பதவி முத்திரை பதிக்கவும்.).

திகதி :----.

1-266/3

---

**அரச சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்**

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளும்
திறந்த போட்டிப் பரீட்சை– 2015/2016

திறந்த போட்டிப் பரீட்சை கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் மற்றும் பொது ஊழியர் எண்ணிக்கை மற்றும் விசேட ஊழியர் எண்ணிக்கையின் தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பப் பாடங்களில் காணப்படும் 219 வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமை கொண்டோரினைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிடப்பட்ட தினம் அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல 1503 கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை– 2015/2016" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி : 2016.02.01

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**1. சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிமுறைகள் :**

(அ) நியமனம் வழங்குவதற்காகத் தேர்ந்தெடுப்பதற்கு எழுத்து மூலப் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களில் தகைமை பெற்றோர் வாய் மூலப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அளவு குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளில் வாய் மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது வெற்றிடங்களுக்கமைய சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கை மற்றும் அவ்வளவில் 25% அளவு ஆகிய இரண்டில் மொத்தமாகக் கணிப்பீடு செய்யும் எண்ணிக்கை மாத்திரமாகும். விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சையினால் பெற்றுக் கொண்ட புள்ளிகள் வாய் மூலப்பரீட்சை சபைக்கு வழங்கப்படமாட்டாது. வாய் மூலப் பரீட்சைக்காகப் புள்ளி வழங்கும் முறை இவ்வறிவித்தலில் இலக்கம் 9.2 இன் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து மூலப் பரீட்சை மற்றும் வாய் மூலப் பரீட்சைக்காகப் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கமைய III தரத்தின் வெற்றிடங்கள் நிரப்பப்படும். ஏதேனும் வெற்றிட எண்ணிக்கை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

(ஆ) திறந்த போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் தென், சப்பிரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய, ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்களில் காணப்படும் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்காக சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

| பாடங்கள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| பொது ஊழியர் எண்ணிக்கை | 197 |
| தகவல் தொழில்நுட்பம் | 11 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 06 |
| உயிரியல் தொழில்நுட்பம் | 05 |

**2. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.21 ஆந் திகதிய 1928/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களுக்கு அமைய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனத்தைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியச் சம்பளங் கொண்டது. விதவைகள், தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும்.

(iii) இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

(iv)

| மொழி | அடைய வேண்டிய தேர்ச்சிகள் |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர் ஒருவர் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன் ஓர் அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சுற்றறிக்கை அம்சங்களின் உரிய மட்டத்தின் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| இணைப்பு மொழியில் தேர்ச்சி : | சேவையில் இணைந்த உத்தியோகத்தரொருவர், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழியில் (ஆங்கில மொழி) தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இணைந்த மொழி பரீட்சை தொடர்பாக இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் அத்தியாயம் 7 இல் உள்ளது. |

| மொழி | அடைய வேண்டிய தேர்ச்சிகள் |
|---|---|
| | **குறிப்பு :** உத்தியோகத்தரொருவர் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்கு திறமைச் சித்தியை அல்லது உயர் சித்தியை அடைந்திருப்பின் இணைப்பு மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஆங்கில மொழி மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் இத் தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |

(v) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள்,காலத்திற்குக் காலம் அரச சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மறுசீரமைப்பின் நிபந்தனைகள் இப்பதவிக்காக உரியதாகும்.

(vi) இலங்கை கல்வி நிர்வாக சேவை III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையில் தேவைக்கமைய மத்திய அரசு அல்லது மாகாண அரச சேவையில் பொது ஊழியர் எண்ணிக்கையில் பதவிகளுக்கு அல்லது விசேட சேவை ஊழியர் எண்ணிக்கையின் பதவிகளுக்குத் தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

3. **சம்பள அளவு**.- இப்பதவிக்குரிய பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இற்கமைய SL-1- 2006 ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள் :**

(அ) ***பொது ஊழியர் எண்ணிக்கை***.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ***விசேட ஊழியர் எண்ணிக்கைக்காக*** (தகவல் தொழில்நுட்பப் பாடம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பப் பாடம்) :

- தகவல் தொழில்நுட்பப் பாடத்திற்காக உரிய பாடத்திற்குரிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழம் ஒன்றிலிருந்து பட்டத்தைப் பெற்றிருத்தல்.
- தொழில்நுட்பவியல் பாடத்தின் கீழ் உயிரியல் தொழில்நுட்பப் பாடத்திற்காக விவசாயம் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டத்தைப் பெற்றிருத்தல்.

(இ) ***விசேட ஊழியர் எண்ணிக்கைக்காக*** (பொறியியல் தொழில்நுட்பப் பாடம்).- இயந்திரம், நிர்மானிப்பு, மின்சாரம் மற்றும் இலத்திரனியல் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டம் அல்லது இலங்கையின் உயர் தொழில்நுட்ப நிறுவகம் ஒன்றினால் வழங்கப்படும் 04 ஆண்டுகால உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDE) அல்லது கட்டுநாயக்க பொறியியல் நிறுவகத்தினால் வழங்கப்படும் 04 ஆண்டு கால பொறியியல் விஞ்ஞானம் தொடர்பாக தேசிய டிப்ளோமா (NDES) பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று 22 வயதை விடக் குறையாது 30 வயதை விட மேற்படாது இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமை**.- சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கட்டுப்படுதல் வேண்டும். பதவியின் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் உள தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த பேட்டிப் பரீட்சைக்காக ஒரு பரீட்சார்த்திக்குத் தோற்றக்கூடிய உயர்ந்தபட்ச தடவைகளின் எண்ணிக்கை 02 ஆகும்.

(iv) இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கமைய இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத்தோற்றுவதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**8. விண்ணப்பிக்கும் முறை :**

(i) ஒரு பரீட்சார்த்தி பொது ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக விசேட ஊழியர் எண்ணிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்ட III (ஆ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்காகவும் விண்ணப்பிக்க முடியும். விசேட ஊழியர் எண்ணிக்கையின் கீழ் விண்ணப்பதாரி இதன் 4(ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றிருப்பது அத்தியாவசியம் என்பதுடன் பட்டத்திற்காகத் பயிலும் மொத்தப் பாட அலகுகளின் (ஒருசில) எண்ணிக்கையில் 1/3 பங்கேனும் விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய பாடங்களாக இருக்க வேண்டும்.

(ii) ஒரு பரீட்சார்த்தி பொது ஊழியர் எண்ணிக்கை மற்றும் விசேட ஊழியர் எண்ணிக்கையின் கீழ் பாடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் சேர்த்துக் கொள்ளும் பாடத்தைத் தீர்மானிப்பது அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

(iii) விசேட ஊழியர் எண்ணிக்கையின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படும் பாடத்துறை மற்றும் அதற்குரிய குறியீட்டு இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. தாம் விண்ணப்பிக்கும் பாடத்துறைகள் மற்றும் அதற்குரிய குறியீட்டு இலக்கத்தை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் குறிப்பிட வேண்டும்.

| | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| (அ) பொது ஊழியர் எண்ணிக்கை | 11 |
| (ஆ) விசேட ஊழியர் எண்ணிக்கை | |
| பாடத்துறைகள் | |
| தகவல் தொழில்நுட்பம் | 27 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 43 |
| உயிரியல் தொழில்நுட்பம் | 44 |

**9. சேர்த்துக் கொள்ளும் முறைகள் :**

9.1 ***எழுத்துமூலப் பரீட்சை :***

9.1.1 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

9.1.2 பாடவிதானம்.- எழுத்து மூலப் பரீட்சை வினாத்தாள் 04 இனை உள்ளடக்கியிருக்கும். சகல பாடங்களில் சித்தியடைவதற்காக குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறவேண்டும் :

(i) கிரகித்தல் - 1 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள் (பாட இல. 01)

பரீட்சார்த்திக்கு சிறு பந்திகள் வழங்கப்படும் ஒரு சில பந்திகள் தொடர்பில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கருத்துக்களை சமர்ப்பிக்கப்படும். இதில் ஒன்று அப்பந்தியில் உள்ள விடயங்களுக்கு சிறந்த முறையில் ஒப்பீடாக இருக்கும். மிகவும் பொருத்தமான கூற்றினைத் தேர்ந்தெடுக்க பரீட்சார்த்திக்கு ஆலோசனை வழங்கப்படும். பரீட்சார்த்திக்கு இப்பந்தியின் கருத்தினை விளங்கக் கூடிய முறையினைப் பரிசீலனை செய்யக் கூடியவாறு வினாக்கள் வழங்கப்படும். இது கட்டாயக் கேள்விகளைக் கொண்ட வினாப்பத்திரமாகும் (சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

(ii) நுண்ணறிவுப் பரீட்சை - 1 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள் (பாட இல. 02)

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான அறிவினை விருத்தி செய்வதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் பல்தேர்வு மற்றும் குறுகிய பதில்களை வழங்கக் கூடிய 50 கேள்விகள் உள்ளடங்கியுள்ளன. (சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

(iii) பொது அறிவு - 1 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள் (பாட இல. 03)

இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார சூழல் மற்றும் கல்வி முறைமை உட்பட பரீட்சார்த்தி வாழும் மற்றும் பணியாற்றும் சூழல்,தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சமகால சம்பவங்களைப் போன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விருத்தி தொடர்பாகவும் பரீட்சார்த்தி தொடர்பான அறிவினைப் பரிசீலனை செய்வதற்கான வினாத்தாளாகும். பல் தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வடிவிலான 50 வினாக்களைக் கொண்டுள்ளது. விளக்கம் பெற்றிருக்க வேண்டும். (சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

(iv) கட்டுரை மற்றும் சுருக்கம் - 1மணித்தியாலம் 30 நிமிட வினாத்தாள் - 100 புள்ளிகள்
(பாட இல. 04)

கட்டுரைகள் எழுதுவதற்காக சமகாலத் தலைப்பு வழங்கப்படும். கட்டுரையில் உள்ளடங்கும் விடயங்கள் மற்றும் அவ்விடயங்களை ஒழுங்கமைத்தல், சமர்ப்பிக்கும் முறை மற்றும் மொழி,பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் நுண்ணறிவு, சிந்தனைகளை, கருத்து வெளிப்பாட்டுச் சக்தியினை அளவீடு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. முழுமையாக கட்டுரை கிரமமாக மற்றும் தெளிவாக சுருக்கமாக சமர்ப்பிப்பது தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தப்படும்.

சுருக்கத்திற்காக வழங்கப்படும் பந்தி அல்லது பல பந்திகள் சுருக்கமாக எழுத வேண்டும்.

9.2 ***வாய்மூலப் பரீட்சை :***

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான அறிவு, தர்க்க ரீதியிலான அறிவு மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல், தொடர்புசாதனத் திறமை மற்றும் ஆளுமையினை மதிப்பீடு செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட புள்ளி ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய வாய்மூலப் பரீட்சை நடாத்தப்படும். இதன் போது வழங்கப்படும் உயர்ந்தபட்ச புள்ளி அளவு 25 ஆகும்.

| பாடத்துறை | உயர்ந்தபட்ச புள்ளிகள் |
|---|---|
| 1. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான அறிவு | 4 |
| 2. தர்க்க ரீதியிலான மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல் | 8 |
| 3. தொடர்பு சாதனத் திறமைகள் | 8 |
| 4. ஆளுமை | 5 |
| மொத்தம் | 25 |

(ii) எழுத்து மூலப் பரீட்சையில் தகைமை பெற்ற பரீட்சாத்திகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுவான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது அவ்வாறு தகைமை பெற்ற பரீட்சாத்திகள் மாத்திரமாகும்.

(iii) வாய்மூலப் பரீட்சைக்கு முன்னர் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காகப் பொதுவான நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதன்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. பொதுவான நேர்முகப் பரீட்சையின் போது ஆட்சேர்ப்பு செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ததாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை வாய்மூலப் பரீட்சைக்கு அழைப்பதற்காகத் தகைமை பெறுவோர் மேலே குறிப்பிடப்பட்டவாறு பொதுவான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் ஏதேனும் எண்ணிக்கை வாய்மூலப் பரீட்சைக்கு அழைப்பதற்காகத் தகைமைபெறாத பட்சத்திலும் அவ்வாறு தகைமை பெறாதோருக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரர்கள் மீள நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

9.3 ***பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்.***- இவ்வறிவித்தலில் 01 (அ) வாசகத்திற்கமைய எழுத்து மூலம் மற்றும் வாய்மூலம் ஆகிய இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றி அதில் உயர்ந்த சித்திகளைப் பெற்றோரின் திறமைத் தொடருக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேறு ஆவணம் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து அரச சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக வெளியிடப்படும்.

10. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஏதேனும் ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். சகல வினாக்களுக்கும் ஒரே மொழி மூலம் விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபா ஆகும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக் கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் அல்லது பிரதேச செயலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்படும் நிதி எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

(v) *முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.*

*வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி, விண்ணப்பிக்கும் ஊழியர் எண்ணிக்கை மற்றும் அதற்குரிய தகவல்கள் அடங்கும் அட்டவணையினைப் பூரணப்படுத்தி விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தலும் உரியதாயின் மாத்திரம் திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.*

***குறிப்பு**.- அனுமதிப் பத்திரமின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் மாத்திரமாகும்.*

*பரீட்சாத்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.*

(vi) *விண்ணப்பப்படிவம் 22 x 29 சென்ரிமீற்றர் அளவில் A4 தாளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் 1 தொடக்கம் 4 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், 5 தொடக்கம் 6 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 3 ஆம் 4 ஆம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய தகவல்களை தமது கையெழுத்தின் ஊடாகத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பபடிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் அறியத்தருகிறேன். இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கவும்.*

(vii) *பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னர் தமது பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினைத் துரிதகதியில் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாக அமையும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் இட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.*

(viii) *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு இணங்க பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.*

(ix) *பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.*

(x) ***பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.*

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*
(ii) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.*

***குறிப்பு** :*

*(அ) விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் ஒரு ஆவணம் அல்லது பிரதியினை இணைக்கக் கூடாது.*

*(ஆ) கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சாத்தியின் விண்ணப்பம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.*

(xi) பரீட்சார்த்தி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்த்தினை இரத்துச் செய்ய முடியும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் உண்மைக்குப் புறம்பானது என பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு முக்கியவிடயத்தை மறைத்திருப்பின் சேவையில் இருந்து இடைநிறுத்த சந்தர்ப்பம் உள்ளது.

விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரர்களும் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். தற்போது அரச சேவையிலிருக்கும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கும் உத்தியோகத்தர் ஊடாக, அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தமது ஒப்பத்தினை அரச பாடசாலைப் பொறுப்பாளர்கள் /கோட்டத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், முப்படையின் அதிகாரிகள்,ரூபா 240,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினைப் பெறும் அரச அல்லது மாகாண சேவையில் உள்ள நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தேரர் அல்லது வேறு சமயத் தலைவர்கள் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

(xii) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுக்கு உரியதாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடுகளற்ற நிலைமைகள் காணப்படும் வேளையில் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது எனக் கருத்தில் கொண்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

டபிள்யு. எம். பந்துசேன
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2015, திசெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குசேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015/2016**

Open Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Education Administrative Service– 2015/2016

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம்- 4

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் "ஊழியர் எண்ணிக்கை" :
பொது ஊழியர் எண்ணிக்கை மாத்திரம் - 1
விசேட ஊழியர் எண்ணிக்கை மாத்திரம் - 2
பொது மற்றும் விசேட ஊழியர் எண்ணிக்கை இரண்டிற்கும் - 3

☐

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் ஊழியர் எண்ணிக்கை விசேட ஊழியர் எண்ணிக்கையாயின் விடயத் துறையின் குறியீட்டு இலக்கத்தை கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடவும் (வர்த்தமானி அறிவித்தலுக்கமைய)

| ஊழியர் எண்ணிக்கையின் பெயர் | பாடத்துறையின் பெயர் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| பொது | ////////////////////////////////// | |
| விஷேட | | |
| விஷேட | | |

1. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)
1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ+ம் : GUNAWARDENA, H.M.S.K)
1.3 முழுப் பெயர் (சிங்களம் / தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
2.4 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :

3. 3.1 ஆண்/பெண் பால் :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல.

5. 5.1 தேசிய இனம் :
சிங்களவர் - 1
தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம்கள் - 4
ஏனையவர்கள் - 5

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5.2 திருமணமாகாதவர் / திருமணமானவர் -
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5.3 பிறந்த திகதி —

ஆண்டு மாதம் திகதி

5.4 2016.02.01 ஆந் திகதியன்று வயது —

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. இப்பதவிக்காகத் தகைமை பெறும் பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலம் :----.

7. கல்வித் தகைமை :

7.1 பட்டம் அல்லது ஏனைய தகைமை பெற்ற திகதி :----.
7.2 பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
7.3 பல்கலைக்கழகப் பதிவிலக்கம் :----.
7.4 வெளிவாரி/ உள்வாரி :----.
7.5 பட்டம்/ ஏனைய தகைமைகள் :----.
7.6 பாடங்கள் :----.
7.7 வகுப்பு :----.
7.8 உயர்/கீழ் :----.
7.9 பரீட்சை இலக்கம் :----.
7.10 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----.

8. 2010, 2013 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பது குறித்துக் குறிப்பிடவும். (√அடையாளம் இடுக)

| ஆண்டு | ஆம் | இல்லை |
|---|---|---|
| 2010 | | |
| 2011 | | |

9. பரீட்சைக் கட்டணம்

பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சரியாக இங்கு ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்துக் கொள்ளவும்)

10 மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய உண்மையானது என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட.................. ஆம் இலக்க ..................... ஆம் திகதிய பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சைச் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமையச் செயற்படுவதாகவும், இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது எனது பரீட்சார்த்தி அந்தஸ்த்து

இரத்துச் செய்யப்படும் அல்லது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குகிறேன். பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படுவதாகக் குறிப்பிடுகிறேன். நான் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் பொருத்தமற்றவர் எனத் தெரியவரின் பதவியிலிருந்து நீக்கவும் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இங்கு கையொப்பமிட்ட ........................................................................................ இல் வதியும் வண./ திரு./ திருமதி/ செல்வி ................................................ ஆகிய இவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாகவும் அப்பற்றுச் சீட்டினை ஒட்டியுள்ளதாகவும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இங்கு பதிக்கவும்).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**தாபனப் பொறுப்பாளரின் உறுதியுரை :**
*(அரச / மாகாண அரச / அரச கூட்டுத்தாபனத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்)*

இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண./ திரு./ திருமதி/ செல்வி .............................. இவ் அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் .......................................... என சேவையாற்றுவதுடன், அவரின் விண்ணப்பப்படிவத்தைப் பரிந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன். இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இந்நிறுவன சேவையிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

----,
நிறுவனப் பொறுப்பாளரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையை இங்கு பதிக்கவும்).

1-266/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்***.

***முக்கிய கவனிப்பு***.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்***.

***அட்டவணை-2016***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | 01.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.12.2015 |
| | | வெள்ளி | 08.01.2016 | .. | நண்பகல் 12 | புதன் | 23.12.2015 |
| | | வியாழன் | 14.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.01.2016 |
| | | வெள்ளி | 22.01.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.01.2016 |
| | | வெள்ளி | 29.01.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.01.2016 |
| ***பெப்புருவரி*** | .. | வெள்ளி | 05.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.01.2016 |
| | | வெள்ளி | 12.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.01.2016 |
| | | வெள்ளி | 19.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.02.2016 |
| | | வெள்ளி | 26.02.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.02.2016 |
| ***மாச்சு*** | .. | வெள்ளி | 04.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.02.2016 |
| | | வெள்ளி | 11.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.02.2016 |
| | | வெள்ளி | 18.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2016 |
| | | வியாழன் | 24.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2016 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.